# பாதுகாவலன்

PATHUKAVALAN


இவ்வார விநியோகம்

| | |
|---|---|
| யாழ். சென் ஜேம்ஸ் | 350 |
| பாஷையூர் பங்கு | 311 |
| இளவாலைப் பங்கு | 264 |
| கரம்பொன் பங்கு | 262 |
| அச்சுவேலிப் பங்கு | 260 |
| பருத்தித்துறை பங்கு | 260 |
| யாழ். பேராலயம் | 250 |
| சில்லாலைப் பங்கு | 225 |
| நெடுந்தீவு பங்கு | 201 |
| மன்னார் பேராலயம் | 192 |
| பாண்டியன் தாழ்வு | 175 |
| மண்டைதீவு பங்கு | 173 |
| வங்காலை பங்கு | 170 |
| நாவாந்துறைப் பங்கு | 150 |
| ஆனைக்கோட்டை பங்கு | 135 |


மலர்: 115 இதழ்: 27 28-7-1989 (யூலை 28 — ஆகஸ்ட் 4) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு



Library Periodicals Division -8-30


# தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கிறிஸ்தவர்கள் பாராட்டு விழா

**சென்ற மாதம் 14ஆம் திகதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கிறிஸ்தவர்கள் [தமிழ்நாடு முதல் அமைச்சருக்கும் சக] அமைச்சர்களுக்கும் பாராட்டு விழா நடத்தியபோது சென்னை-மைலாப்பூர் பேராயரும் தமிழ்நாடு ஆயர்மன்றத் தலைவருமான் பேரருள்திரு கஷ்மீர் ஞானதிக்கம் சே. ச. ஆண்டகை சிறப்புரை ஆற்றினார்.**

கலைஞர் மு. கருணாநிதி 13 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சராக இருந்த பொழுது உருவாக்கிய வள்ளுவர் கோட்டம் நிரம்பி வழிந்த சனத்திரள் மத்தியில் தமிழ்நாடு கிறிஸ்தவர்கள் புதிய முதலமைச்சரின் நான்கு மாத ஆட்சியில் அவரைப் பாராட்டி விழா எடுத்தனர்.

தமிழ் நாடு கத்தோலிக்கரின் பெயரால் முதலமைச்சரைப் பாராட்டிப் பேசிய சென்னை-மைலாப்பூர் பேராயர் முதலமைச்சர் பதவியேற்றவுடனேயே தாம் அவரை அவரது இல்லத்தில் தரிசித்து தமது ஆதரவைத் தெரிவித்ததாகவும், ஆனால் பகிரங்கமாக தமது ஆதரவைத் தெரிவிக்க வேண்டிய கடமை தமக்கு இருப்பதால் தாம் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், தெரிவித்தார்.

எம்மை ஆளுகின்றவர்களை கடவுளின் பிரதிநிதிகளாக மதித்து, அவர்களைக் கௌரவித்து, அவர்களுக்கு ஆதரவளிப்பது கிறிஸ்தவ பண்பாடு என மிகுந்த கரகோஷத்தின் மத்தியில் கூறிய பேராயர், கடந்த நான்கு மாதங்களாக கலைஞரின் ஆட்சியில் நடந்த முன்னேற்றகரமான செயல்களைப் பாராட்டினார்.

## தாய்வானைத் தரிசிக்க சீனக் கத்தோலிக்க தலைவர்களுக்கு அழைப்பு

தாய்வானில் இவ்வருடம் டிசம்பரில் நடக்கவிருக்கும் சர்வதேச ஆய்வரங்கொன்றுக்கு மக்கள் சீனக் குடியரசிலிருந்து பன்னிரு சமயத் தலைவர்களும் கல்விமான்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஐந்து கத்தோலிக்க ஆயர்களும், ஒரு குருவும், ஒரு புரொட்டஸ்தாந்து ஆயரும் அடங்குவர்,

இவர்கள் இந்த அழைப்பை ஏற்றால் 1949-ல் கம்யூனிஸ்ட் கட்சி சீனாவில் ஆட்சியைக் கைப்பற்றியபின் தாய்வானைத் தரிசிக்கும் முதல் சீனப்பிரமுகர்களாக இவர்கள் இருப்பார்கள்.

இவ்விரு நாடுகளையும் தவிர்ந்த இடங்களில் சீன, தாய்வான் திருச்சபைத் தலைவர்கள் சந்தித்திருப்பினும், இதுவே முதல் உத்தியோக பூர்வமான தொடர்பு எனக் கூறப்படுகிறது.

## திருச்சபை அரசாங்கம் அளித்த சலுகையல்ல

"இந்தோனேஷியாவில் திருச்சபை இருப்பது அதன் உரிமை, அரசாங்கமோ பிறரோ அளித்த சலுகையல்ல" இவ்வாறு ஜகார்த்தா பேராயர் சொகோட்டோ மே 4-ம் திகதி நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கூறினார்.

இக்கருத்தரங்கு புனித லூக்காஸ் கத்தோலிக்க வைத்திய நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கு குழுமியிருந்த கத்தோலிக்க வைத்தியர், தாதியர் ஆகியோருக்கு, கிறிஸ்தவ தலைவர்கள் இந்தோனேஷியாவின் அரசியற் கொள்கையான பஞ்சசீலத்திற்கு சமய சுதந்திரத்தைப்பற்றிய முக்கிய பகுதியொன்றை அளித்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

"ஒவ்வொருவரும் தாம் விரும்பிய மதத்தை ஏற்று அதற்குரிய வகையில் வழிபாடுகளை நடத்துவதற்கு சுதந்திரம் உறுதி செய்கின்றது" என அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது.

## ஆயர் திருநிலைப்படுத்தலின் 8ஆம் ஆண்டு நினைவு தினம்



**30—7—1989**

**மன்னார் ஆயர்**

**பேரருள்திரு**

**தோமஸ் சவுந்தரநாயகம்**

**ஆண்டகை அவர்களுக்கு**

### அன்பு வாழ்த்துக்கள்

தாய்மடியில் அருளமுதை அருந்தி நேசத்
தந்தைவழி காட்டுதலிற் கலைகள் தேர்ந்து
தூயதிரு மறைக்குருவாய் ஞான வாழ்வின்
துறைகண்டு நிறைகொண்டு மந்தை காக்கும்
ஆயரெனத் திகழ்ந்தொளிரும் அன்பின் தோமஸ்
ஆண்டகையார் வேண்டுவன அனைத்தும் பெற்றே
தேயமெலாம் அகமகிழ்ந்தே ஆன்ம சேவைத்
திலகமெனப் புகழ்பாட நீடு வாழ்க.

## மட்டக்களப்பில் பத்து வீட்டுத் திட்டம்

பங்கிற்குப் பத்து வீடு என்ற அடிப்படையில் எகெட் ஸ்தாபனம் வழங்கிய நன்கொடையில் ஏழைகளுக்கு வீடு அமைக்கும் பணி தாண்டவன்வெளி பரி. வியாகுல மாதா ஆலயப் பங்கினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக வட்டாரத் தலைவர்கள் தங்கள் வட்டார மக்களைச் சந்தித்துத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்கள் குறிப்பிட்ட ஒரு குழுவினால் பார்வையிடப்பட்டது. இவ்வீட்டுத்திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## கொழும்பு பேராலய பங்குத்தந்தை அருள்திரு றூபஸ் பெனடிக்ற் காலமானார்



கொழும்பு பேராலய பங்குத்தந்தையாக கடந்த ஏழு ஆண்டுகள் பணிபுரிந்த அருள் திரு. ரூபஸ் ரட்ணராஜா பெனடிக்ட் வெள்ளிக்கிழமை ஜூலை 21இல் காலமானார்.

1935 ஒக்ரோபர் 6ஆம் நாள் யாழ். இணுவிலில் பிறந்து 1959 டிசம்பர் 21-ல் கொழும்பு மறை மாவட்டக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு சென். பீற்றேஸ் கல்லூரி கனிஷ்ட பிரிவு அதிபராக பத்து ஆண்டுகள் பணிபுரிந்தார்.

தேசிய சமூகத்தொடர்பு இயக்குனராக பத்து ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த வேளையில் வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார். தாமே பல ஆங்கில நிகழ்ச்சிகளுக்குமெருகூட்டினார். UNDA எனப்படும் நிறுவன ஆசிய பிராந்திய இயக்குநராக சென்ற ஆண்டுவரை பணியாற்றினார்.

கடந்த ஏழு ஆண்டுகளாக கொழும்பு பேராலய பங்குத் தந்தையாகப் பணியாற்றி இம் மாத முடிவில் புதிய தேசிய மனித முன்னேற்ற நிலைய இயக்குனராக (Sedec) பொறுப் பேற்கவிருந்தார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

# விடியல்

இலங்கை கத். ஆயர்கள் இம்மாதம் 7-8 திகதிகளில் திருத்தந்தையைச் சந்தித்தபோது இலங்கை ஆயர் மன்றத்தலைவர் பேரருள்திரு நீக்லஸ் மாக்கஸ் பெர்ணாண்டோ ஆண்டகை அவர்கள் ஆயர்கள் சார்பில் திருத்தந்தைக்கு ஆற்றிய உரையில் திருத்தந்தை நமது நாட்டுக்கு விஜயத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்.

இலங்கையில் அமைதி திரும்பியதும் தகுந்த முறையில் நாம் திருத்தந்தையை வரவேற்க முடியும் என்றும இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது அந்நாள் வெகு தொலைவில் இல்லை என்றும் பேராயர் தம் உரையில் குறிப்பிட்டார்.

சுக துக்கம் சுழல் சக்கரம் என்பார்கள். இலங்கையில் சொல்லொணுத் துன்பங்களுக்கும், அழிவுகளுக்கும். இழப்புக்களுக்கும ஆளாகித் தவிக்கும் மக்கள் விடியலுக்காக ஏக்கத்தோடு காத்துக் கொண்டிருக்கிருர்கள். சுகமான வாழ்வு வெகுவிரைவில் வரவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

எமது நாட்டின் நிலைமை, சங்கிலித் தொடராக, அழிவிலிருந்து பேரழிவாக மாறிக்கொண்டே செல்கின்ற பரிதாபகரமான நிலையே காணப்படுகிறது. பகலைக்காணுத தொடர்ச்சியான இரவுகளாகவே எமது வாழ்வு அமைந்துவிட்டது.

எமது கடைசித் தலையங்கம் எழுதி மை காய்வதற்கு முன என்ன நடக்கும என்ற கேள்விக்கு பதிலும் கிடைத்து விட்டது. ஜூலை 13-ம் திகதி இரவே அமிர், யோகேஸ் ஆகிய தமிழ மக்களின் மூத்த தலைவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன. 15-ம் திகதி இரவு உமா மகேஸ்வரன் கொலை செய்யப்பட்டார்.

இன்னும் எத்தனை குளறுபடியாக செய்திகள் இந்நாட்களில் வெளியிடப்பட்டு மக்களை பலவிதமாகப் பாதித்துள்ளன எனபதைச் சொல்லவும் வேணடுமா?

ஜே. வீ. பீ. தீவிரவாதிகளின் விளக்கம்கொடுக்க முடியாத செயற்பாடுகள், இலங்கை மக்களை கதிகலங்கச் செய்துள்ளன. வடக்கில நடந்ததறகு எதிர்மாருக பெருமபாலும பொதுமக்களைப் பாதிக்கும செயலகளைச் செயது ஸ்தம்பிதநிலையை உருவாக்கும் தந்திரத்தின் காரணத்தை விளக்கமுடியாது இருக்கிறது.

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான புதிய திட்டம குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, இலங்கை அமைச்சர் குழு ஒன்று புதுடிலலிக்குச் செல்லும் நிகழ்ச்சி பல குழப்பங்களின் மத்தியிலும் முன்னேற்றகரமான செயல்கள் நடைபெறுவதைச் சுட்டிக்காட்டுகின்றது.

திருகோணமலையில் ஜூலை 24ஆம் திகதி அமைச்சர்கள் திரு. எஸ். தொண்டமான, திரு. காமினி திசநாயக்கா, திரு. ரஞ்சன் வஜேரத்தின ஆகியோர் வடக்கு –கிழக்கு மாகாண அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்தப் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

திருத்தந்தை இலங்கைக் கத்தோலிக்க ஆயர்களுக்குக் கூறிய அறிவுரையில் முக்கியமானது பல்வேறு குழுக்களுடனும் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும என்பதாகும்.

எனவே விடியலுக்காக காத்திருக்கும் மக்கள், விடியலுக்கு வழி சமைக்க பேச்சுவார்த்தை அவசியம் என்பதை ஏற்றுக்கொண்டு, அதற்காக உருவாக்கப் பட்டுவரும் சந்தர்ப்பங்களைப் பாராட்டவேண்டும்.

இலஙகை மக்கள சார்பாக இலங்கை ஆயர்கள் திருத்தந்தையிடம் கூறியதுபோல இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்க்குமபோது இலங்கையில் அமைதி திரும்பும் நாள் தொலைவில் இல்லை என்பதை நாமும் கண்டுகொள்வோம். தொடர்ந்தும் தேவையற்ற கொலைகளுக்கும அழிவுகளுக்கும் நாம் காரணமாயிராது பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அனைவரும் முன்வருவோம்.

வாழவேண்டிய, வளரவேண்டிய எமது எதிர்காலச் சந்ததியை முளையிலேயே கிள்ளிவிடுகின்ற அநியாயமான செயல்களைத்தவிர்க்க உறுதிகொள்வோம்.

# பொதுக்குருத்துவத்தில் பொதுநிலையினர் பணிக்குருத்துவத்தில் குருகுலத்தார்

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை றே. க. வித்தியாலயத்தில் 1989-07-15 ஆம் திகதி சனிக்கிழமை பங்கின் பொதுநிலையினர் கழகக்கூட்டம் நடைபெற்றது. இது பங்குத்தந்தை ஜெபரட்ணம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 3 ஆவது பொதுநிலையினர் கழக கூட்டமாகும். புதுக்குடியிருப்பு பங்கின் அனைத்து ஆலயங்களைச் சேர்ந்த பொதுநிலையினரும், மிக அதிகளவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு பங்குத்தந்தை அருள்திரு ஜெபரட்ணம் அடிகளாரோடு, உதவிப்பங்குத்தந்தை அருள்திரு. தவராஜசிங்கம் அடிகளாரும், அருள் சகோதரன் அன்ரனிப்பிள்ளை அவர்களும், கலந்துகொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர். உதவிப்பங்குத்தந்தை அருள்திரு. தவராஜசிங்கம் அடிகளாரால் பொதுநிலையினர் பற்றி சிறப்புரையாற்றப்பட்டது. அவர் தனதுரையில் பொதுக்குருத்துவம் பணிக்குருத்துவம். பற்றி தெளிவாக விளக்கமாக எடுத்துரைத்தார். தொடர்ந்து தந்தையர், அன்னையர், இளைஞர், யுவதிகள் என பிரிக்கப்பட்டு குழுநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இக்குழு ஆய்வில் கொடுக்கப்பட்ட வினுக் கொத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில சிறப்பு விஞக்களும், அவற்றுக்கான ஆய்வு முடிவுகளும்:-

கேள்வி: (i) திருச்சபையில் பொதுநிலையினர் பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?

பதில்:- 2 ஆம் வத்திக்கான் சங்கத்துக்கு முன்பு திருச்சபை (பாப்பரசர், கருதினல்மார்கள் ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள்) –மக்கள் என பிளவுபட்டிருந்தனர். 2 ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு பின்பு ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் பொதுநிலையினரே. இவர்கள் எல்லோரும் பொதுக்குருத்துவத்திற்கு அழைக்கப்பட்டவர்களே. இவர்களிடமிருந்து இவர்களுக்குப் பணிபுரிய பணிக்குருத்துவத்திற்கென குருக்கள் தெரிந்து கொள்ளப் படுகின்றனர்.

கேள்வி:- (2) எமது பங்கில் பொதுநிலையினரின் பணி 2 ஆம் வத்திக்கான்சங்க மாற்றத்திற்கேற்ப நடைபெறுகிறதா?

பதில்:- ஆம். முன்பு குருகுலத்தார் மட்டுமே ஆலய வழிபாடுகளை நடத்தினர். இன்று பொதுநிலையினரே அதிக பங்குகொள்கிருர்கள். முன்பு குருக்களே மறைபரப்புப் பணிகளில் ஈடுபட்டனர். இன்று பொதுநிலையினரும் அதில் பங்கெடுக்கின்றனர். சிறப்பாக எமதுபங்கில் தந்தையர்கள், அன்னையர்கள், மறையாசிரியர்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், சிறுமிகள் என பிரிவினர்க்கேற்ற படி பக்திச்சபைகள் அமைக்கப் பட்டு இப்பணிகள் நடைபெறுகின்றன. (தொடரும்)

# 3000 அலுமினியக் குடங்களை துயர்துடைப்புச் சங்கம் கிராம வாசிகளுக்கு விநியோகிக்கவுள்ளது

மன்னர் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியினுல் குளங்கள், குட்டைகள், நீரின்றி காணப்படுகிறது. குறிப்பாக கடலையண்டியுள்ள கிராமவாசிகள் குடி நீருக்காக பல மைல் தூரம் கால் நடையாக சென்று அன்ருடதேவைக்கு குடிநீரை சேகரித்து வருகின்றனர். இவர்களில் ஏழை குடும்பங்களிடம் குடிநீரை சேகரித்து வைக்க போதிய கொள்கலன்கள் இல்லாத காரணத்தினுல் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இவர்களின் துயரை துடைப்பதற்காக மன்னர் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் அலுமினிய குடங்களை விநியோகிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. செயலாளர் திரு. சின்கிலேயர் பீற்றர் கருத்து தெரிவிக்கையில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஒத்துழைப்புடன் 3000 குடங்களை மன்னர் மாவட்டத்திலுள்ள கடலையண்டிய கிராமங்களான கத்தாளம்பிட்டி, தேன்பிட்டி, விடத்தல்தீவு, தலைமன்னர், பேசாலை, தாழ்வுபாடு, மன்னர் பட்டினம், வங்காலை, சிலாவத்துறை, அரிப்பு, முள்ளிக்குளம் போன்ற கிராமங்களுக்கும் குடிநீர் கிணறு இல்லாத ஒருசில கிராமங்களுக்கு அவ்வூர் மாதர் சங்கத்தின் பிரதிநிதிகள், மதப் பிரதிநிதிகள், சமூக சேவையாளர் போன்ருேரின் ஒத்துழைப்புடன் இவ்வுதவி திட்டத்திற்கு குடும்பங்களை தெரிந்தெடுத்து உதவிகள் வழங்க இருப்பதாகவும் கூறினர்.

* * *

# மன்னர் மறைவட்ட பொதுநிலையினர் பேரவை

மன்னர் மறைவட்ட பொதுநிலையினர் பேரவைப் பொதுக் கூட்டம் மே மாதம் 31-ந் திகதி மறைக்கல்வி நடு நிலையத்தில் ஒன்றுகூடியது ஒவ்வொரு பங்குகளிலிருந்து மூன்று பிரதிநிதிகளும், மறைவட்ட அப்போஸ்தலிக்கப் பணிசபைகளினதின் தலைவர்களும், ஆயரால் நியமிக்கப்பட்ட ஒரு சிலரும் பங்கு கொண்டார்கள். மறைவட்டப் பொதுநிலையினர் இயக்குனர் அருள்திரு அ. சேவியர் குரூஸ் அடிகளார் அனைவரையும் வரவேற்ருர். சில கால இடைவெளிக்குப்பின் கூட்டப்பட்ட கூட்டத்தில் மறைவட்டப் பொதுநிலையினர் பேரவையின் நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது. அனைவரையும் பொறுப்புடன் செயற்படுமாறு அடிகளார் கேட்டுக்கொண்டார். அருள்திரு போல் நட்சேத்திரம் அ.ம.தி. ''பங்கும் பொதுநிலையினரும்'' என்ற தலைப்பில் உரையாற்றி ஓர் சிறு கலந்துரையாடலினையும் நடத்தி வைத்தார்.

பின்பு மன்னர் ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தாம் இலங்கை ஆயர் மன்றத்தினுல் பொதுநிலையினர் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாக உள்ளார் என்றும், எமது மறைவட்டத்தில் பொதுநிலையினர் சிறப்பான முறையில் தங்கள் பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கவும் பொதுநிலையினரின் பேரவை மிகவும் அவசியம் எனவும் வலியுறுத்தினர்.

தலைவர்:– திரு. S. யோண்தாசன், சட்டத்தரணி. உபதலைவர்கள்:- திரு. N. டேவிட், திரு. V.A. லெம்பேட், திருமதி ரெஜினு இராமலிங்கம். செயலர்:- திரு ஜேக்கப் பெஞ்சமீன் உபசெயலர்:- செல்வி A. சுசிலா நகுலேஸ்வரி. பொருளர்:- திரு. S. கிறிஸ்ரோபர் எண்பார்வையாளர்களாக திரு A.P. பிகிருடோ, திரு. A. செபமாலை குரூஸ் ஆகியோரும் மற்றும் பங்குகளிலிருந்து நிர்வாக உறுப்பினராக பதினொருவரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தகவல்:– V. A. லெம்பேட்

# முருங்கனில் தையல் வகுப்பு

வாழ்வுதயத்தின் மகளிர் அமைப்பான பெண்கள் வட்டத்தினல் முருங்கனில் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப் பட்டுள்ளது 60 யுவதிகள் இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்கிருர்கள்.

வாழ்வுதய இயக்குனர் அருள் திரு ஒல்பன் இராஜசிங்கம் அவர்கள் ''ஒவ்வொருவரிடத்திலும் மறைந்துள்ள திறமைகள் வெளிக் கொணரப்படுதல் அவசியம் நமது ஆற்றல்களை நமக்குள்ளே புதைத்து வைக்காமல் அவை அபிவிருத்தி செய்யப்பட்டு பொதுநன்மைக்குப் பயன்பட வேண்டும். இப் பயிற்சிக் காலத்தில் தையல் கலையைக் கற்றுக் கொள்வது மட்டுமன்றி, ஒருவர் ஒருவருடன் பழகுவதற்கும், மற்றவர்களின் நல்ல பண்புகளைப் பின் பற்றவும், இப்பயிற்சி நெறி உதவவேண்டும்'' என்ருர்.

தகவல்:– ஜெயா பாலாஜி முருங்கன்

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத்தளங்களில்....

## வட்டச்சோலை

சிலாபம் மறைவட்டத்தைச் சேர்ந்த கற்பிட்டிக் குடா நாட்டில் தலைவில்லுப்பங்கில மைந்துள்ள "காட்டுக்கோயில் என்று பண்டைக்காலம் தொடக்கம் பலராலும் அழைக்கப்படும் வட்டச்சோலை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஆனித் திங்கள் 13-ம் நாள் தலைவில்லுப் புனித ஆனுள் சேத்திரப் பரிபாலகர் அருள்திரு. பிராங் திசேரா அடிகள் தலைமையில் வெகு கோலாகலமாக நடைபெற்றது ஆனித்திங்கள் 4-ம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான இத்திருவிழா 13-ம் திகதி திருநாள் கூட்டுத்திருப்பலியுடனும், புனிதரின் திருச்சொருப ஆசிருடனும், நிறைவுற்றது. திருவிழா ஆராதனைகளை ஆனைமடுப் பங்குத்தந்தை அருள்திரு. வின்சன்ட் ஜெயராசா, கட்டைக்காடு பங்குத்தந்தை அருள்திரு. ஞானப்பிரகாசம், தலைவில்லுப் புனித ஆனுள் சேத்திரப் பரிபாலகர் அருள்திரு. பிராங் திசேரா, அருள்திரு ஜஸ்டின் சில்வா, தலைவில்லுத் திருச்சேத்திர துணைப் பங்குத்தந்தை ஆகியோர் நடத்திவைத்தனர். பல்வேறு இடங்களிலும், இருந்து வந்திருந்த ஏராளமான பக்தர்கள் திருவிழாவில் பங்குகொண்டு புனிதரின் ஆசிரைப் பெற்றனர்.

தகவல்:- நரக்களியூர்.
J. M. J. ஜெயசிலன

★

## யாண்டியந்தாழ்வு

"வின் செந்திய பணி நாம் கொண்டுள்ள மனப்போக்கில் அமைவதல்லால், செய்யும் தருமத்தின் பரிமாணத்தில் அல்ல. எனவே தருமம் சிறிதானுலும் பெரிதானுலும், என்ன மனப்போக்கில் அமைகிறதோ அதுவே உத்தம தருமமாகும்"

புனித வின்சென் டி போல் மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருள்திரு. S. H. ஜெபநேசன் அடிகள் பாண்டியன்தாழ்வு புனித அன்னுள் பந்தியின் ஆண்டுக்கூட்டத்தில் அருள்உரை வழங்குமபோது கூறினுர். மேற்படி கூட்டம் 17/6/89 இல் புனித அன்னுள் பங்கு மண்டபத்தில் தலைவர் C. R. யோசவ் தலைமையில் நிகழ்ந்தது. ஆண்டறிக்கையும் வரவு செலவு திரட்டும் சமர்ப்பிக்கப்பட்ட பின் அருள்தந்தை மேரியோசவ் அடிகள் உரையாற்றுகையில் குறிபபிடப்பட்ட மனப்போக்கின் அடிப்படையில் தன் நலமற்ற, தியாக உணர்வோடு கூடிய செயற்பாடே கிறிஸ்தவ சேவை எனக் குறிப்பிட்டார்"

## உயிலங்குளம்

உயிலங்குளப் பங்கைச் சார்ந்த பறப்பாங்கண்டலில் உள்ள மாதா கூட்டத்தினர் அனைவரும் சங். சகோதரி கிளமன்ற் அவர்கள் தலைமையின் கீழ் ஆனிமாதம் 8-ந்திகதி மடுயாத்திரை மேற்கொண்டனர்.

9-ந் திகதி காலை ஆரம்பத்தியான உரையில் அருள்திரு. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி. அடிகள் ஒரு தாயின் மகத்துவம் பற்றி, அதாவது தாய்மாராகிய எமக்கு முன்னுேடியாக விளங்கும் மரியாள் எப்படி இறைவனின் திருச்சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து பொறுமையுடனும், தாழ்மையான உள்ளத்தோடும், கற்புடனும் வாழ்ந்து, உலகம் போற்றும் தாயாக உயர்ந்தாளோ அவ்வாறே தாய்மாராகிய நாம் ஒவ்வொருவரும் எமக்கு இறைவன் தந்த அழைப்பாகிய இல்லறத்தில் கணவன் மட்டிலும், பிள்ளைகள் மட்டிலும் பொறுப்புணர்ச்சியோடு எம்மைத்தியாகம்செய்தும், எமது பிள்ளைகளுக்கு எமதுநல்வாழ்க்கையை விட்டுச் செல்லவேண்டும் என்றுர். அனைவரும் ஆர்வத்துடன் பங்கேற்றுத் தங்களுக்குள்ளிருக்கும் குறைநிறைகளை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றிக் கலந்துரையாடினர். பிற்பகல் 4-00 மணியளவில் செபமாலை செபித்துச் சற்பிரசாத ஆசிர்வாதம் இடம்பெற்றது. 10-ந் திகதி காலைத்திருப்பலியுடன் யாத்திரை நிறைவெய்தியது.

தகவல்:- மேரிருஜினி
சந்தியோகு
பறப்பாங்கண்டல்

★

## மாத்தளை

மாத்தளை தோமையார் திருவிழா ஆடி 3ஆம் நாள் புதிதாகப் புனரமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட (அடுத்தார்)

பீடத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது வழிபாடுகள் மும்மொழிகளிலும் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

தகவல்:- அருட்சகோதரர்
அன்ரனி சூசை C.M.S.F

★

## செட்டிகுளம்

செட்டிகுளக் கிராமத்தில் புனித அந்தோனியாரின் பெருவிழா ஆனித் திங்கள் பதின்மூன்ரும் நாள் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. வழிபாடுகளுக்கான மறையுரைகளை அருட்திரு ஜீவாபோல் வழங்கி வழிபாடுகளை உயிருட்டமுள்ளதாக்கினுர்.

சிறுவர் தினம், இளைஞர் தினம், பெற்ருேர் தினம், மறையாசிரியர்கள் தினம் என்று நாட்கள் குறிக்கப்பட்டு கருத்தரங்குள் நடாத்தப்பட்டன. இங்கு பரிமாறப்பட்ட கருத்துக்கள் யாவும் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் விதைத்த நல்ல பலன் தரும் விதைகளாகவே அமைந்தன.

திருவிழாத் திருப்பலி அருள்தந்தை ஜீவாபோல் தலைமையில் அருள்தந்தை லடிஸ்லாஸ், அருள்தந்தை அன்ரூ அன்ரனி ஆகியோர் கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். அவர் தமது மறையுரையில் புனித அந்தோனியாரின் வாழ்வையும் சிறப்பையும் எமக்கு எடுத்துக் கூறி புனிதரின் பாதையில் வாழ எம்மையும் அழைத்தார். திருப்பலி முடிவில் புனிதரின் திருச்சுருபப்பவனி இடம்பெற்றது. உருக்கமான வேண்டுதல்களுடன் பவனி இடம்பெற்றது. புனிதரின் திருச்சுருப ஆசிருடன் விழா நிறைவுற்றது.

தகவல்:-
செல்வி மரி அகஸ்ரீன்

## வேதாகம வி. வி. போட்டி 25இன் முடிவு

பாராட்டுப் பெறுவோர்

ஜி. சவரிமுத்து பாஸ்கரன், இ. ஆன்சிலின் பெகின், சவிரி யேசுதாசன், வே. பிரான்சிஸ் பேரின்பநாயகம், ச. லியோ அருள்மொழிவதனன், ச. யூயினியா ஆனந்தி, எஸ் அன்ரன் மார்க், சூ. உதயசிலி, சூ. இதயமலர் மார்க், க. ஜேக்கப் டலிமா க. திலகா டலிமா, க. கிறிஸ்ரினுடலிமா, க. ஜெகன் டலிமா ம. தர்ஷன் றெவல், நிலாந்தி பாலச்சந்திரன், சுகந்தி துரைசிங்கம், எற்வேட் மெலறின் கிறிஸ்ரெலா, யே. கவிதா லோரன்சியா, வின்சன் அன்ரனற் அனுபா, எல். ஜெயிஸ்ரன் ஜெயராஜ், டொடா றிச்சாட், ப. ஷிரூேமி, அ. மரியபெர்னுண்டோ. ம. மரியஸ்ரெலா, ஞா. மரியமங்களதாசன், செ. நீல் றெமிகுருஸ், செ. மெனிக் ரேவதி குருஸ், யோ. நளினி மார்க், அ. மே. வெலிசிஸ், யோ விவின்ரன் மார்க், சே. செல்வராணி குலாஸ், சே றெசான் குலாஸ், யோ. விவிந்தா மார்க், ம. நி. தேவ சுதேந்திரக் குமார், சிமியோன் ஜெகநாதன், சிமியோன் அஞ்சலா, யோ. கல்யாணி மார்க், வே. மேரி பிரேமா, பெ யூடிக்காமல் பெஞ்சமின், தம்பிஜயா தங்கராணி, தம்பிஜயா ஸ்கொலஸ்டிக்கா, அகஸ்ரீன் யூட் அல்வின். யுஸ்ரஸ் பொனவெந்துரர், செ மேரி பிளங்ரு, செ. நந்தா, பா. றெஜீஸ், பெனுன்டோ, செல்வி அனுஷா பிரான்சிஸ், பொ. அலன்மிலர் ஜேம்ஸ் பொனிபஸ், ஜே ஜொயிட், எம். யூலியானு, அ. ஜெரோ சோசை. ந. ஜெயசீலன் தா. ரூசாந்தி குருஸ். ந. யுஸ்ரின் பீரிஸ், பற்றிக் கமலினி, பற்றிக் எட்வேட் கென்றி, பற்றிக் சகாயசிலன், சூ யஸ்ரின் சோசை, ஏ வேதநாயகம் யூலியற் ஜெசிமா, இ. கொன்சால் வேஸ், லூ. கிளின், செல்வி வேர்ஜின், ஈ. ஏ. வி. கிறிசாந்தி சில்வாபுள்ளே, யோ. நிக்கலஸ் ரொசான், பொ. மேவின், போல் மரியநாயகம். நவரட்ணம் பற்றிமாரூேஸ், ஏ. டிரோன் பர்னுந்து லியோகரூேலின் வாஸ், அ. வாணி சோசை. லியோசம்யா வாஸ் ச. வெற்றி ரஜினி லெம்பேட், ஞானம் காவேரி, செல்வி யோ. ஜெயப்பிரியா, ச. பிரபாகரன், நவரட்ணம் அமலநாத். ச. அன்ரனிதாஸ், செல்விபோல்பிறிஜிற் சுகி அருளப்பு சகாயபுஸ்பம், றேமரியசிலி; எம். ராஜன் குலாஸ், ம சிங்கராயர் சரூேஜினி. அ. வில்டா மேரி சிராய்வா, அ. றெமிஜியஸ் சிராய்வா, அ. ஓனுேறியஸ் அ கில்டா சிராய்வா, ஏ. அன்ரன் மதுரநாயகம் அ லூக் குருஸ். அ. அந்திரேசுப்பிள்ளை, க. கிறிஸ்ரினு, டெலிமா சவுந்தரநாயகம் ஜெயா, ஜே வி பத்மராஜ், கே. டி. திலகா. சந்தான் அனற்ரூ, வி மேரி பற்றீசியா, ஜே யூடிற் ரஜனி ப. யோ. புனிதராணி, ஜெனுேவா திருச்செல்வம், தி. றெஜி ஞா. வசந்தசீலன், அன் அகஸ்ரீன், அ கலா, எஸ் யூட்ராணி வாஸ், வி விக்டோரியா ராணி, ப. பப்ரிஸ்ரா சோசை, செலஸ்ரீன் புஸ்ப ரூேஜினி, அ யூட் கிருபாகரன், சி. சிவாகாந்தன். ஏ. அன்ரன் பெசில். வனஜா அந்தோனிப்பிள்ளை, ப. யூலி சோபியா, அ. அன்ரனி நிமால் கூஞ்ஞு, இ. டிறீன் ரூஜ லக்ஷி எலிசபேத், தே. குயினி எலிசபேத் லூசியா ஜெயராணி, அந்தோனிப்பிள்ளை காமல், இமல்டா அந்தோனிப்பிள்ளை, ஜேதீபன் சோசை, எம். மாலா குலாஸ், ஜே. அகிலன் சொய்சா, ஜே. கீதாஞ்சலி சோசை, யோ. றேகன், பீ. புனிதம் குலாஸ், போல்ராஜ லிகினிசோசை, ஞா. சிமீடன் பீரிஸ், டொன் பொஸ்கோ அகிலன் சோசை, எல். மார்சலஸ் நிரூேஜன் வாஸ், டொ. மலர்வேந்தன் சோசை, ச. வெற்றிநேசன் லெம்பேட். ஞா. கைதடிபொன்கவன் பீரிஸ், அ. றேவதன், யோ. றேவதி, யோ. றேனுகா, ஏ. எவ். ரட்ணகுமார், சுதா டேவிட், இ. எறிச் யோசவ், வி. ரூஜன் நத்தானியல், ம. யூடான்ரோ, மெக்டலின் விகிலா பாலசேகரம், ம. அன்ரன் யூட், அசம்ரா யோகமலர், பி. வலன்ரைன், பா. டொறின் காமலிற்ரு, ச. ஜொய்லின அசம்ரா, சாமினி எமல்டா.

பரிசுபெறும் நற்பேருளர்
எ. எட்மன் ரேய் மே/பா அம்புரோஸ் எட்சன்
சென். மேரிஸ் வீதி. பண்டத்தரிப்பு




### புனித லொயோலா இஞ்ஞாசியார் – ஜுலை 31
(கி. பி. 1491 1556)

இவர் 1534-ம் ஆண்டு மோன்மார்ட்டர் என்ற இடத்தில் 6 தோழர்களுடன் சேர்ந்து தரித்திரம், கற்பு, ஆகிய இரு வார்த்தைப்பாடுகள் எடுத்துக்கொண்டார். திருத்தந்தை 3-வது சின்னப்பர் இச்குழுவுக்கு அன்பு காட்டி, சிலரைக் குருத்துவத்தை மேற்கொள்ளக் கேட்டுக்கொண்டார். குருப்பட்டம் பெற்ற இவர் முதற்பலி நிறைவேற்ற ஓராண்டளவாகத் தன்னைத் தயார் செய்து கொண்டார் கீழ்ப்படிதலை அச்சாணியாகக் கொண்ட குழு நாளடைவில் துறவற சபையானது. 1541-ம் ஆண்டு இஞ்ஞாசியார் தனது சபையின் முதல் தலைவராகத் தெரிந்து கொள்ளப்பட்டார். "யேசு சபை" என்ற பெயர் கொண்டு 1000 அங்கத்தினர்களுடன் அன்று பொலிவுடன் விளங்கியது.

### புனித அல்போன்ஸ் லிகோரியார் – ஆகஸ்டு 1.
(கி. பி. 1696–1789)

நேப்பிள்ஸ் நகரில் தோன்றி சட்டக்கலையில் பயிற்சி பெற்று, அரசியல் சட்டம் திருச்சபை [illegible] ர். பின்னர் குருவாகி, விரைவிலேயே அதே நகருக்கு அருகில் ஆயராக உயர்த்தப் பெற்ருர். பங்குத் தளங்களில் மறை பிரசன்னங்களைத் தொடர்ந்து நிகழ்த்தி மக்களை நல்வழிப் படுத்துவதற்கென "இரட்சகர் சபை" ஒன்றை துறவிகட்கு என்று நிறுவினுர். இவர் பல நூல்களை எழுதினுர். இதன் காரணமாக "சன்மார்க்க சாஸ்திரம்" என்ற துறையில் வல்லுநர் என்ற பெயரும் பெற்ருர்.

### புனித மரிய வியான்னி அருளப்பர் – ஆகஸ்டு 4
(கி. பி. 1786–1859)

பிரான்ஸ் நாட்டில் நெப்போலியன் காலத்தில் பக்தியுள்ள பெற்ருேருக்கு மகனுகப் பிறந்தார். இவர் குருவாக வேண்டும் என்று விரும்பி குருமடத்தில் சேர்ந்தார். பாடம் படிப்பதற்கு ஓரளவுக்குக் கடினமாகத் தோன்றியது. ஆனுல் புதுமையாகக் கற்றுத் தேர்ந்தார். குருப்பட்டம் பெற்றபின் ஆர்ஸ் நகர பங்குக் குருவாக நியமனம் பெற்ருர். இவரது முதன்மையான சேவை பாவசங்கீர்த்தனம் கேட்பதாகும். இந்தத் திருவருட்சாதனத்தைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான பாவிகள் இவரைக் காத்துக்கொண்டிருப்பர். இவர் நாள்தோறும் 14–18 மணிவரை பாவசங்கீர்த்தனம் கேட்பார். புனிதர் 1859-ம் ஆண்டு தமது 73-வது வயதில் விண்ணகம் சென்ருர்.

### புனித கன்னிமரியாயின் ஆலய அபிஷேகம் – ஆகஸ்டு 5
(பனிமயமாதா திருநாள்)

ஜான் என்பவர் திருமணமாகியும பிள்ளை இல்லாததால் தன்னிடம் இருந்த ஏராளமான பொருட்களை நல்ல காரியங்களுக்குச் செலவிட விரும்பி அந்தக் காரியத்துக்காக அவரும் அவரது மனைவியும் சேர்ந்து உருக்கமாக வேண்டினர். ஒருநாள் உறக்கத்தில் தேவதாய் காட்சியளித்து அருகில் உள்ள மலையில் பனி உறைந்திருக்கும் இடத்தில் தமது பெயரால் ஆலயம் கட்டும்படி கேட்டுக்கொண்டாள். மறுநாள் அவர்கள் பரிசுத்த பாப்பரசரிடம் சென்று இதை அறிவித்தனர். அவர் இதைக் கேட்டு வியப்படைந்தார். ஏனெனில் தேவதாய் அவருக்கும் அதே இரவில் அதே மலையில் தேவாலயம் கட்டும்படி சொல்லியிருந்தாள். ஜான் பாப்பரசரின் உத்தரவோடு தன் செலவில் ஆலயத்தைக் கட்டி முடித்தார். இது பாப்பு 3–ம் சிக்ஸ்துஸ் காலத்தில் பேராலயமாக எழுப்பப்பட்டு "சென் மேரி மேஜா" என்று அழைக்கப்படுகிறது. இது கி. பி. 431-ம் ஆண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

எஸ். எஸ். கருணைதாஸ்.
அ. ம. தி. குருமடம்.
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத திருப்பங்கள்

**சிறுகதை**

வழமைபோன்று மேரி பூசை முடிந்தவுடன் சிறிதுநேரம் ஆலயத்தினுள் செபித்துவிட்டு வருவது வழக்கம். அவளது மடியில் தவழ்ந்த அன்புச் செல்வம் இடைக்கிடை அழுது அவளது செபத்தைக் குழப்பிக் கொண்டிருந்தான். ஆலயப் பீடத்தின்மீது கம்பீரமாகக் காட்சியளிக்கும் சிலுவையை உற்று நோக்கியபோது அவளையறியாமலே கண்ணீர்த் துளிகள் 'பொலு பொலு'வென கன்னங்களில் வழிந்தோடத் தொடங்கின.

கடந்தகால வாழ்க்கையின் சோகமான நிஜங்கள் நினைவலைகளிலிருந்து புறப்பட்டு வந்து மனத்திரையில்மோதின, இரண்டு வருடங்களுக்கு முன்பு அவள் வாழ்க்கையில் வெறுமையை, வெற்றிடத்தை, தனிமையை ஏற்படுத்திய சம்பவங்களை அவளால் எப்படி மறக்க முடியும். கசப்பான அந்த நிகழ்வுகளின் தாக்கங்களின் பிரதிபலிப்பை அவள் மனம் மறக்கக்கூடிய நிலையில் இல்லை.

சுமாரான வசதிகளுடன் கூடிய குடும்பத்தில் பிறந்த அவளை அவளது பெற்றோர் உயர்தர வகுப்புவரைக்கும் படிப்பித்திருந்தனர். படிப்பைத் தொடரப் பொருளாதார வசதி இடம் கொடுக்காமையால் அவளதுகிராமத்திலே ஒரு சிறுவர் பாடசாலை ஆசிரியையாகப் பணி புரிந்து வந்தாள். அவளுக்கு சிறுவர்கள் என்றால் கொள்ளை ஆசை அவர்களுடைய உலகத்தில் தானும் வாழ்வதில் ஒரு திருப்தி காணுவாள். அந்தச் சிறு மழலைகள் 'ரீச்சர் அக்கா, என்று அழைக்கும் மழலை மொழிகளில் தன்னை மறந்து போவாள். சம்பளமாக ஒரு சிறு தொகையே கிடைத்தாலும் சிறுவர்களுக்கு படிப்பித்து அவர்களுடன் சேர்ந்து விளையாடி மகிழ்வதில் ஏற்படும் இன்பம் அதைவிடப் பெரிது என நினைத்து வாழ்பவள் மேரி.

அவளது கிராமத்திலேயே சமூக சேவையில் ஈடுபட்டு கிராம முன்னேற்றத்திற்காக உழைக்கும் அன்ரனியின் நட்பு அவளுக்குச் கிடைத்தது. பண்பாகவும், எளிமையாகவும் நடந்து கொள்ளும் அன்ரனியின் போக்கு அவளுக்கு நன்றாகப் பிடித்திருந்தது. தன்னலம் கருதாது கிராமத்தை முன்னேற்ற அயராது உழைக்கும் அவனது செயற்பாடுகள் அவளைக் கவர்ந்தன. பல தடவைகளில் அவளது சிறுவர் பாடசாலையின் தரத்தை உயர்த்த எவ்வித செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்று அவளுடன் அவன் கலந்தாலோசித்ததுண்டு. எடுப்பான தோற்றத்துடனும் இளமைத் துடிப்புடனும், கலகலப்பாக அமைதியாக பேசும் சுபாவத்தோடும் விளங்கிய அன்ரனி ஊர்ப்பெரியோர்கள் மத்தியிலும் நல்ல மதிப்பைப் பெற்றிருந்தான். சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு வழமையாகக் கிடைக்கும் சொல்லெறிகளை அவன் பொருட்படுத்தியதில்லை.

எதிர்ப்புக்கள் எந்தக் கோணத்தில் வந்தாலும் அவற்றை எதிர்நோக்கி மனச்சாட்சியுடன் நடந்துகொண்டால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்பது அவன் கருத்து. அவனது பங்குத்தந்தையும் அவன் மட்டில் அக்கறையுள்ளவராக அவனுடைய முயற்சிகளுக்கு பாராட்டும் ஊக்கமும்அளித்து வந்தார். தன்னோடு ஆர்வமுள்ள கிராமத்து இளைஞர்களை இணைந்து செயற்படும் படியும் தூண்டினான்.

அவனுக்கு நெருக்கமாக நின்று துணைபுரிந்த நண்பன் ரவியை அவனால் மறக்கவே முடியாது. இராணுவக் கெடுபிடிகளாலும் சுற்றிவளைப்புகளாலும் அன்ரனியால் அவ்வளவு சுதந்திரமாகச் செயற்படவும் முடியவில்லை. சில வேளைகளில் மனம் தளர்வுறும் போது வெளிநாடு போய்விடுவோமா என்று கூட அவன் நினைத்ததுண்டு.

இப்படியாக எல்லா இளைஞர்களும் நினைத்தால் யார்தான் எங்கள் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது, வழி நடத்துவது என்ற கேள்விக்கணைகளால் அவன் எண்ணங்கள் மாறிவிடும்.

************

**ரேகான் ஸ்ரனி அன்ரனி**
**உயிலூர்**

************

காலச்சக்கரத்திலே ஏற்பட்ட தொடர்புகளினால் மேரி அன்ரனியின் வாழ்க்கைத் துணைவியாகிவிட்டாள். ஒரு இலட்சியக் கணவனை அடைந்துவிட்ட திருப்தி அவளுக்கிருந்தது.

அன்ரனக்கும் வன் செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் ஒரு அரசசார்பற்ற நிறுவனத்திலே தொடர்பு அதிகாரியாக வேலை கிடைத்தது. இதன் மூலமும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை செய்து நன்மதிப்பைப் பெற்று விளங்கினான். அவர்களது குடும்ப வாழ்க்கையும் இனிமையாகவும மகிழ்ச்சியாகவும் கழிந்து கொண்டிருந்தது.

அவர்களின அன்பின் சின்னமாக ஒரு மகனுக்குத் தாயானாள் மேரி. தன் மகனை அள்ளி அரவணைத்து மழலை மொழி கேட்டு மகிழ்வதிலும் கணவனுக்கு ஒத்தாசையாக இருந்து உதவி புரிவதிலும் நேரத்தை அவள் செலவிட்டாள்.

ஒவ்வொருநாளும் தன் கணவன் அன்ரனி வீட்டை விட்டுப் புறப்படும்போது கர்த்தரிடம் தன் கணவனைப் பாதுகாப்பாக மீண்டும் வீடு கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்றே வேண்டிக் கொள்வாள்.

அன்றொருநாள் அவள் எதிர் பார்த்திராத அந்த சம்பவம் நடந்துவிட்டது. இராணுவ சுற்றிவளைப்பு மோதலில் எதிர்பாராதவிதமாக அன்ரனி சுட்டுக் கொல்லப்பட்டான். செய்தியறிந்து மேரி தலையிலடித்து கதறியவாறு தலைவிரி கோலமாக வைத்தியசாலைக்கு விரைந்தாள். உயிரற்ற அன்ரனியின் சடலத்தின் மீது புரண்டு புரண்டு அலறினாள். அன்ரனியின் இழப்பை யாரால் ஈடுசெய்ய முடியும்? நிரப்பக் கூடிய வெற்றிடமா? அவள் வாழ்க்கையிலே எல்லாமே போய்விட்டது என்ற நிலையில் யாரிடமும் பேசமாட்டாதவளாக தனிமையை நாடினாள்.

அவளது வாழ்க்கையே இருண்டுவிட்ட நிலையில் எதிலும் பிடிப்பில்லாது காலம் தள்ளினாள். கர்த்தர் தன் கணவனது உயிரைப் பாதகர்கள் பறிக்க அனுமதித்து விட்டாரே என்று இதயம் குமுறினாள் இனி நான் யாருக்காக வாழ வேண்டும் என்று அவள் வாய் விட்டுக் கத்தியபோது

''ஏன் உங்கள் அன்புச் செல்வத்திற்காக, அன்ரனியின்வாரிசிற்காக வாழக்கூடாதா'' என்ற வார்த்தைகளைக்கேட்டுத் திரும்பியபோது அன்ரனியின் நண்பன் ரவி வாசலில் நின்று கொண்டிருந்தான்.

''ஓ ரவி, என் கணவன் போனபிறகு நான் வாழ்ந்து பிரயோசனமில்லை. எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு வாழ்ந்த என் கனவுகள் எல்லாம் கலைந்துவிட்டன என் உயிரோடு கலந்த என் இதயக் கோவில் சரிந்த பிறகு அதனுள்ளே வாழ்ந்த சிலைக்கு மதிப்பேகிடையாது. அவரோடு வாழ்ந்த அந்த இனிமையான நாட்களை என்னால் மறக்கவே முடியாது'' என்று கேவிக் கேவி குழந்தையைப் போல் மேரி அழுவதைப் பார்க்க ரவிக்கு வருத்தமாக இருந்தது. தன் நண்பனின் இழப்பை அவனாலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''மேரி அன்ரனியின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றுதான் எவ்வளவோ இன்பமான மனக்கோட்டைகள்கட்டி கணவனோடு நீண்ட நாட்கள் ஒரு நிறைவான வாழ்க்கை வாழ வேண்டுமென்று உங்களைப்போன்ற ஒரு சாதாரண பெண் விரும்புவது இயற்கையானதே. உங்கள் அன்பின் சின்னமாகிய மகனுக்காக ஏன் நீங்கள் வாழக்கூடாது? தன் நினைவை என்றும் உங்களோட வைச்சிருக்க அன்ரனி விட்டுச் சென்ற செல்வமாக ஏன் உங்கள் மகனைக் கருதக்கூடாது'' என்று ரவி கேட்டபோது அவள் மௌனமானாள். ரவி சொல்வதிலும் ஒருவித நியாயம் இருப்பது அவளுக்குப் புரிந்தது.

''ரவி எங்கட சமுதாயத்தில ஒரு இளம் விதவை தனிச்சு வாழுறதை என்னால நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. நான் எப்படி என்ர மகனைத் தன்னந் தனியே வளர்த்தெடுக்கிறது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை ரவி,'' என்று மீண்டும் அழாக் குறையாகச் சொன்னாள்.

''மேரி இப்படியே வன் செயலால கணவனை இழக்கிறவங்களெல்லாம் இளம் விதவைகளாகக் காலம் தள்ளணும் என்ற விதியுமல்ல, சமுதாயத்தின் தலையெழுத்துமல்ல. இப்படிப்பட்டவர்களை மறுமணம் செய்து வாழவைக்க எங்கட இளைஞர்கள் முன்வரணும் அதற்காக நான் போராடத்தான் போறன்'' என்று ஆவேசமாக கூறியபோது மேரி அதிர்ந்து போனாள்.

''மேரி உங்களுக்காக அல்ல, உங்கள் மகனுக்காக நீங்கள் மறுமணம் செய்துகொண்டால் என்ன?'' என்றுரவி தொடர்ந்த போது மேரி நிலை குலைந்து மௌனமானாள்.

பின்னர் பேசினாள் ''ரவி நீங்க இந்த எண்ணத்தை எனக்கு ஊட்டத்தான் இங்கே வந்தீங்க என்று முன்னமே தெரிஞ்சிருந்தா உங்க உறவை வாசலோடையே துண்டிச்சிருப்பேன். என் கணவரோட நண்பன் என்றதற்காக உங்களோட பேசியதே தப்புத்தான் என் கணவனோட வாழ்ந்த இனிமையான இந்த இரண்டு வருஷமே என் ஆயுட்காலம் வரைக்கும் போதும். அந்த நினைவுகளுடனேயே மடிந்தால் அதுவே எனக்குப் போதும். தயவு செய்து வெளியே போயிடுங்க'' என்றபோது ரவி தொடர்ந்தான்.

''மேரி, நீங்க என்ன தப்பா புரிஞ்சிற்றீங்க நீங்க மறுமணம் செய்து இனி வருகிற இளம் விதவைகளுக்கு சவாலாக விளங்கணும் எண்டுதான் உங்களைக் கேட்டன். வீணாக எங்கட சமுதாயத்தின் மரபுகளுக்கு பலிக்கடாக்களாகி உங்கட வாழ்க்கையை பாழாக்கக் கூடாதெண்ணு தான் விரும்பினன். எதிர்காலத்தில இளம் விதவைகளெல்லாம் மறுமணம் செய்து வாழணும் என்ற ஆசையில்தான் சொன்னன். நான் தப்பாய் பேசியிருந்தால் என்னை மன்னிச்சிடுங்க. நீங்க யோசிச்சு ஒரு முடிவுக்கு வருவது நல்லது. எண்றைக்காவது ஒரு நாளைக்கு உங்கட வெள்ளைப் புடவை பச்சையாக மாற வேண்டும். அதுதான் என் ஆசை' அதுவரைக்கும் குட்பை!'' என்று ரவி வெளியேறினான்.

(யாவும் கற்பனையல்ல)

## வைரவிழாக் கண்ட அருட்சகோதரர் கிறகறி பேணட்

அருள்சகோதரர் கிறகறி பேணட் டிலாசால் சபையில் 60 ஆண்டுகள் அருள்சகோதரராகப் பணி புரிந்து அதன் நிறைவாக, மகிழ்வாக, தனது வைர விழாவை 1989-06-26 அன்று கொண்டாடி மகிழ்ந்தார்.

காலை 9 மணியளவில் தொடங்கிய விழாத்திருப்பலிக்கு மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், குரு முதல்வர், குருக்கள், அருள்சகோதரர்கள், அருட்சகோதரிகள், புகுமுகமடமாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுநிலையினர், பெற்றோர், திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தமை எம் பங்குமக்களிடையே குடும்ப உணர்வைத் தட்டியெழுப்பியது.

ஆயர் தனது மறையுரையில் இச்சகோதரர் மன்னார் மறைவட்டத்தில்பணியாற்றிய 26 வருடங்களையும் நினைவு கூர்ந்தார். அதமட்டுமல்லாது இவரது குணதிசயங்களையும் சேவை மனப்பான்மையையும், எடுத்துரைத்தார். அத்தோடு தனது வயது முதிர்ந்த வேளையிலும் துடிதுடிப்போடும். கண்டிப்போடும் அவர் தனது ஓய்வு நேரத்தில் மலர்த்தோட்டத்தை பராமரிப்பது பற்றியும் கூறி அவரது 60 ஆண்டுப்பயணம் எம் ஒவ்வொருவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்றும், இதைப் பின்பற்றி அவரது பயணத்தைத்தொடர எபபகுதி இளைஞர்களும், யுவதிகளும தம்மை முழுமையாக அர்ப்பணிக்கவும் அழைக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்காகவும் அவர்கள் தமது அழைத்தலில் உறுதியோடு, பிரமாணிக்கமாய்செயற்பட அவர்களுக்காக மன்றாடும்படியும் கூறி தனது வாழ்த்துக்களை விழாநாயகருக்குத் தெரிவித்தார். அவர் தனது துறவற வார்த்தைப் பாட்டைப் புதுப்பித்தார். பின் சகோதரரின் நன்றியுரையோடு திருப்பலி இனிதே நிறைவெய்தியது

''நாங்கள் பயனற்ற ஊழியர்கள் செய்யவேண்டியதைத் தான் செய்தோம' (லூக். 17:10) என்ற உணர்வோடு இறைவனின் துணையை நம்பி இறையரசுப் பாதையில் தன் நெடிய பயணத்தைத் தொடர் கின்றார்.

R. ஜோசப் ஜெயகாந்தன்
130. டிலாசால் வீதி
கொழும்பு-15

### நானாட்டான் பங்கில்

நானாட்டான் ஆரோக்கிய அன்னை திருவிழாத்திருப்பலி 7 குருக்களுடன் அருட்தந்தை பிலிப் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆரோக்கிய அன்னை ஆயிரமாயிரம் பக்தர்கள் புடைசூழ மலர்தூவி பவனியாக எடுத்துச் செல்லப்பட்டார்.

தகவல்: இ. மெரீனா ரேசா

### தளுவைப் பங்கில்

சிலாபம் மறைவட்டத்தைச் சேர்ந்த தேற்றாப்பளைப் பங்கிலமைந்துள்ள இம்மறை வட்டத்தின் யாத்திரைத் தலங்களில் ஒன்றான தளுவை புனித. அந்தோனியார் திருவிழா ஆனித் திங்கள் 13-ம் நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தகவல்: நரக்களியூர்
J. S. A. அமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய யூதாஸ் யார்?

அன்றைய யூதாஸ் ஒரு பண வெறி பிடித்த நடிகன். இவன் நல்லவனாக இருந்து நாயகனின் நண்பனானன். பரமன் கிறிஸ்துவுடன் அல்லும் பகலும் திரிந்து அவர் பிள்ளைபோல் அன்பையும், ஆதரவையும், அருள்வரத்தையும், அதிகமாக பெற்றான். இவனிடத்தில் பணத்தின்மேல் இருந்த ஆசை சிறுதுளி பெருவெள்ளம்போல வளர்ந்து, பரமனின் பாசத்தையே அறுக்கும் அளவிற்கு வேரூன்றியது. பாவியான மதலேன் மரியாள் பரமனின் பாதத்தில் பூசிய பரிமளப் பொருள்களுக்கு விலை மூந்நூறு வெள்ளிக்காசு எனக் கணக்குப் போட்டவன். யாரையே படைத்த பரம்பொருளை முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டிக்கொடுத்த அன்றைய பாதகன்.

ஆம் என் அன்பு நெஞ்சங்களே! யூதாஸ் செய்தது மன்னிக்கமுடியாத பாவம் தேவதுரோகம், பரமனின் பாசத்தையே வேரோடு அறுத்தவன் என்று கதறும் நீ... உன்னையே சற்று உற்றுப்பார்? உன் வாழ்வை அலசி ஆராய்ந்து பார்! உன் மனச்சாட்சியை தட்டிக்கேள்!... நீர் சொன்ன மனிதனை தீர்த்துக்கட்டிவிடுகின்றேன் அடியோடு அழித்துவிடுகின்றேன். விலாசமே இல்லாது ஆக்கிவிடுகின்றேன். பூண்டோடு ஒழித்துவிடுகின்றேன் என்று ஒருவனிடம் பணத்துக்காக ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லையா? நான் கடவுளையே மறுத்து சமயம் மாறுகின்றேன் என் மகளுக்கு வாழ்வுகொடு என்று பணம்படைத்தவனிடம் கேட்கவில்லையா? வயிற்று பசியை போக்குவதற்காக வாழ்க்கையில் தரமுடியாத விலைமதிக்கமுடியாத கற்பையே கருக்கிவிடவில்லையா? பரமனைத் தேடாது பணத்தை தேடவில்லையா?

இலஞ்சம், வழிக்கொள்ளை, கலப்படம், வியாபாரக் கொள்ளை, குறைத்து நிறுத்தல், வட்டிக்கு வட்டி, போன்ற அத்துமீறிய அடாத்தான செயல்களை பணப்பேய்க்காக செய்யவில்லையா? அல்லது செய்பவர்களுக்கு உதவிசெய்யவில்லையா? ஆம் அன்று காட்டிக்கொடுத்த யூதாஸ் அழிந்து, கருகி, நாசமாகப் போனான். ஆனல் இன்றைய யூதாசாக இருப்பவன் யார்? நீயல்லவா? யோசி, யோசி... சிந்தி, சிந்தி... யோசித்துக்கொண்டே இரு· சிந்தித்துக்கொண்டே இரு· அவனுடைய குற்றத்தை உணர்ந்த நீ முதலில் உன் குற்றத்தை உணர்ந்து இயேசுவிடம் மன்னிப்புக்கேள், மனம் வருந்து, இதில் இருந்து விடுதலை பெறமுயற்சிசெய். முயற்சி செய்துகொண்டே இரு...

S. S. கருணைதாஸ்
அ.ம.தி. குருமடம்
கொழும்புத்துறை.

## சிந்தனைக்கு

★ உணர்ச்சிகளுக்கு நீங்கள் அடிமையாகாதீர்கள்! உணர்ச்சிகளை அடிமையாக்கிக் கொள்ளுங்கள். அவ்வாறாயின் எதிலும் விழிப்புடனும் நிதானத்துடனும் நடந்துகொள்ளலாம்.

★ பிரச்சினைகளுக்கு நீங்கள் அடிமையாகாதீர்கள் பிரச்சினைகளை அடிமையாக்கிக் கொள்ளுங்கள். அவ்வாறாயின் சாந்தியும் சமாதானமும் தானாகவே தேடிவரும்.

செல்வி றேகினி மத்தியாஸ்
சென் ஜேம்ஸ் வசாவிளான்

## இறைவா உன் தரிசனம்?

வானத்தைப் பார்த்தேன்
பூமியைப் பார்த்தேன்
உன்னைக் காணவில்லை
பலநாள் அலைந்தேன்
பலமுறை அழுதேன்
உன் விழிகள்
என்னை நோக்கவில்லை
நினையாத நேரமில்லை
பாடாத பாடலில்லை
உன் தரிசனம்
எப்போது கிடைக்கும்?

அ. றெலி
பாஷையூர்




அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
28-7-1989.

அன்பு இளம் உள்ளங்களுக்கு!
பிள்ளைகளே

1 பேதலித்த நிலையில் பெருமைப்பட வேண்டாம்
2 உயர்மனத்தோரை உதாசினப்படுத்தவேண்டாம்
3 உழைப்பவர்களுக்கு உடந்தையாகவேண்டாம்
4 பிரிவினைகளை பெரிதாக்க வேண்டாம்
5 ஏனோதானோநிலையில் என்றுமே வாழவேண்டாம்
6 சோம்பேறிகளாய் சோர்வுற்று இருக்கவேண்டாம்
7 பழமைவிரும்பிகளின் பாசாங்கில் மயங்கவேண்டாம்
8 இல்லாதோரை இகழ்வுற்றல் செய்யவேண்டாம்
9 வருந்தவோர்களை வார்த்தையால் வதைக்கவேண்டாம்
10. உள்ளன்பின்றி உதடுகள் திறக்கவேண்டாம்

அன்பு நெஞ்சன் வி. பி

## நல் இளைஞனே !!

நல் இளைஞனே
நாளைய உலகின் தலைவன் நீ
எம் இளைஞனே
தீய அரக்கரை ஒழித்திடும்
வீரன் நீ
நல் இளைஞனே
ஒற்றுமையைக் காத்திடும்
பரமன் நீ
எம் இளைஞனே
சாதி என்னும் சகதியை
அழித்திடும் சர்ப்பம் நீ
நல் இளைஞனே
நாளை வெற்றிவாகை
சூடிடும் வேந்தன் நீ
எம் இளைஞனே
இறை வழியை நெறிப்படுத்திடும் புனிதன் நீ
நல் இளைஞனே
நீதி தவறாமல் காத்திடும்
உத்தமன் நீ
எம் இளைஞனே
இயேசுவழியே என்வழி
என்று காத்திடும்

## குருசுமுத்தண்ணையின் கிசுகிசு-43

குருசு:- என்னடி பிள்ளை அன்னம், கலியாணப்பூசையில இத்தனை சனமாயிருக்கு...?

அன்னம்:- ஓம் அண்ணை பெடியன், பெட்டை செய்த சமூக சேவைக்கு வராமல் பின்ன?

குருசு:- எடிபிள்ளை சனம் இவ்வளவு வந்தும் சுவாமி மாப்பிள்ளை பெம்பிளைக்கு மட்டும் தான் சற்பிரசாதம் கொடுக்கிறார் பாரு.

அன்னம்:- அதில்லை அண்ணை நல்ல உடுப்புகளோட வந்தவுகள் எல்லோ அதுகள் தான் முழந்தாளில இருந்தா ஊத்தையாய் போயிடும் எண்டு போகாம இருக்குதுகள்.

குருசு: அப்ப எடி பின்னை கோயிலுக்கு வராம வீட்டில சந்தோசிருக்கலாமே மோனை?

அன்னம்:- அது வீடியோ எடுக்கினம் எண்டதால அதிலமுகங்காட்ட இத்தனை அடுக்கோட வந்திருக்கினம்!

## குடும்பம் ஒரு கதம்பம்
## 'ஒழுக்கத்தின் தாயகம் குடும்பம்'

மனித உடலுக்கு சிரசே பிரதானம். அதற்கு மேலாக மேம்பட்டு விளங்குவது அவனது உயிர். ஆனல் அவ்உயிருக்குப் பல படிகள் உயர்ந்து விளங்குவது தான் ஒழுக்கம் என்றான் தெய்வப் புலவன் திருவள்ளுவன். ஒழுக்கம் தாயின் மடியிலே தலைவைத்திருக்கும்போதே தொடங்கிவிடுகிறது. தாயானவள் தன் மகவுக்கு ஊட்டுகின்ற பாலோடு சேர்த்து ஒழுக்கப் பண்பையும் ஊட்டி அதற்கு மூலக்கல் வைக்கிறாள். பிள்ளைகளில் ஒழுக்கம் என்ற பயிர் வளர வித்திடுபவர்கள் எம் இரு முதுகுரவர்களாகிய பெற்றோரே. அவர்களின் வாயினால் பிறக்கும் நல் வார்த்தைகளும், அறிவுரைகளும், அறவுரைகளும் தம் செயல்களினால் காட்டும் முன்மாதிரிகைகளும் சேயிலே ஒழுக்கப் பண்பை வளர்க்கும் நல் உரங்களாகும்.

ஆனல் இன்று எம் சமூகத்தின் குடும்பங்களை எடுத்து நோக்குகின்றபோது, குடும்பங்களிடையே பிரச்சினை, குடிவெறி, ஆவலாதி, அவதூறு பேசுதல், சோம்பல்தனம், தீய பேச்சு, ஆணவம், அகங்காரம், சண்டை, சச்சரவு, கோப மனப்பான்மை போன்றன எம் குடும்பங்களிடையே நிகழ்கின்ற வழமையான நிகழ்வுகளாகும். இவற்றில் பெரும்பாலான குடும்பத்திலுள்ள பெரிய மனிதர்களே அங்கத்துவம் வகிக்கின்றனர். இச்செயல்கள் வளர்ந்து வருகின்ற இளம் பிள்ளைகளின் கனகாம்பர நெஞ்சங்களைக் காயப்படுத்தி ஒழுக்க நெறியில் தவழப்பழகும் அவர்களுக்கு தடைக்கற்களாக அமைகின்றன. இதனல் பிள்ளைகளின் ஒழுக்க வாழ்விற்கு வித்திட்டு வளர்க்கவேண்டியவர்கள், மாறாக நஞ்சிட்டு வளர்த்து இறுதியில் இருசாராருமே தலைகுனிந்து நடுத்தெருவில் நிற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாவார்கள்

குடும்பத்திலே உருவாகி வளர்கின்ற பிள்ளைகள் மட்டும்தான் ஒழுக்கத்திலே வளர்கின்றார்கள் என்றல்ல பெரியோர் தாங்கள் காலாகாலமாகச் செய்து வருகின்ற ஒருசில தீய பழக்கங்களை வளர்ந்துவருகின்ற பிள்ளைகள்முன் செய்யக்கூடாது என்பதற்காகப் பிள்ளைகளின் நலன்களைக் கருத்தில்கொண்டு தம தீய பழக்கங்களில் இருந்து தம்மை விலக்கிக்கொள்கிறார்கள். எனவே குடும்பமானது எந்த நிலையினரையும் ஒழுக்கநெறியில் உருவாக்குகின்ற ஓர் உற்பத்திச் சாலையாகும்.

ஒருவன் கற்றோர் சபையிலே கொற்றோனைச் சற்றேனும் விலகாது வாழ்கின்றான் என்றால் அதற்கு மூல காரணம் அவன் படித்த பாடசாலையுமல்ல, அவன் பட்டதாரியான பல்கலைக் கழகமுமல்ல ஆனல் அவன் பாலப் பருவத்திலே, தவழ்ந்துதிரிகின்ற நேரத்திலே பெற்ற பண்பான பழக்கவழக்கங்களும், குடும்பத்தின் முன்னேற்றமான தூண்டுதலுமாகும் இதனாலேதான் குடும்பமானது ஒழுக்கத்தைப் பிறப்பிப்பதில் முதலிடம் வகிக்கின்றது.

தம் பிள்ளைகளின் நல்லொழுக்கங்களைக் கண்டு போற்றுபவர்கள் புகழ்ச்சிக்குரியவர்கள் என்றும், தாம் ஈன்ற மக்களிடத்திலுள்ள தீய பழக்கங்களைக் கண்டும் அதை அகற்ற முனையாதவர்கள் பழிப்பிற்குரியவர்கள் என்றும், பரிசுத்தராகிய கடவுளின் கட்டளையை ஏற்று அவ்வழியில் ஒழுகுபவர்கள் திகழத்தக்கவர் என்றும் ஆசாரக்கோவை வலியுறுத்திக் கூறுகிறது.

விசேஷமாகக் கிறிஸ்தவ குடும்பங்களை எடுத்து நோக்குகின்றபோது அக்குடும்பங்களிலே ஒழுக்கமானது இன்னும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. சாதாரண பெற்றோரின் வாழ்க்கையிலும் பார்க்க கிறிஸ்தவப் பெற்றோரின் வாழ்க்கை மிகவும் கடினமானது. பிள்ளைகளினதும், தங்களினதும் கிறிஸ்தவ ஒழுக்கத்தின் மட்டில் அவர்களுக்குப் பாரிய பொறுப்புண்டு. பெற்றோர் தம்மையும் பிள்ளைகளையும் சமுதாயத்தில் ஓர் உத்தம கிறிஸ்தவர்களாக்குவது அவர்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். எனவே பிள்ளைகளை ஒழுக்க நெறியில் உருவாக்குகின்ற பெற்றோர் முதலில் தம்மைத்தாமே பயிற்றவேண்டும். ஒழுக்க சீலர்களாக திகழவேண்டும். தமது வார்த்தையாலும் முன்மாதிரிகையாலும் பிள்ளைகளை ஒழுக்க நெறியில் ஆற்றுப்படுத்த வேண்டும்

நடக்கத்தெரியாமல் தவழும் பாலப் பருவமுதல் நடக்கத் தெரிந்தும் இயலாமையால் தவழும் விருத்தாப்பிய பருவத்தினர்வரை ஒழுக்கமானது எவ்வளவு அவசியம் என அறிந்தோம். இத்தகைய நிலையினரை உள்ளடக்கிய குடும்பமானது பலவிதமான கடமைகளைக் கொண்டுள்ளது. அக்கடமைகளுள் ஒழுக்கப் பண்பை வளர்க்கின்ற கடமையே குடும்பத்தின் மற்றைய பொறுப்புகளுக்கு ஆணிவேராகத் திகழ்கிறது. பண்பான குடும்பத்திலிருந்து சமுதாய மட்டத்துக்கு வந்து பண்பான உறுதியான ஒளிமயமான எதிர்கால சமுதாயத்தை உருவாக்குகின்றவர்கள் இன்று ஒழுக்கத்தின் சின்னங்களாகத் திகழ்கின்றார்கள்.

சி. அ. அருட்செல்வன்
புனித மாட்டீனார் குருமடம, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்துகொள்ளுங்கள் 83

## மோயீசனுக்கு எதிராகக் கிளர்ச்சி

பாலையில் மோயீசனுக்கு எதிராகப் பலர் கிளர்ச்சி செய்தனர். அதில் கொறேயும் அவனைச்சார்ந்தவர்களும் மோயீசன் ஆரோன் என்பவர்களின் அதிகாரத்திற்கு எதிராகச் செய்த சமயக் கிளர்ச்சி முக்கியமானது. (எண். 16:3, 11, 16-24) இல் கொறேயின் கிளர்ச்சி கூறப்படுகிறது.

கொறே லேவி இனத்தைச் சார்ந்தவன். அவனும் அவனோடு சேர்ந்த எதிர்ப்பாளர்கள் 250 பேரும் மோயீசனும் ஆரோனும் செய்துவந்த குருத்துவவேலைக்கு எதிராக எதிர்த்தெழுந்தனர். "நீங்கள் ஆண்டவருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்திக்கொள்கிறீர்கள்." (எண். 16:3)

இக்கிளர்ச்சி சாட்சியக்கூடாரத்தின் முன் மக்கள் திரளின் முன்பாகக் கடும் தேர்வுமூலம் அடக்கப்பட்டது. கிளர்ச்சிக்காரரும் ஆரோனும் தத்தமது தூபக்கலத்தில் தூபம் எழுப்பிய நிலையில் ஆண்டவரின் தீர்ப்புக்காகக் காத்து நின்றனர். ஆரோன் ஒருபுறமும் கிளர்ச்சியாளர் எதிர்ப்புறமாகவும் நிற்கையில் ஆண்டவர் முன்னிலையிலிருந்து புறப்பட்ட ஒரு நெருப்புத் தூபம் காட்டின கிளர்ச்சிக்காரரை விழுங்கிவிட்டது. (எண் 16:35)

அதன்பின் ஆண்டவர் மோயீசனிடம் நெருப்பில் சுடப்பட்ட தூபக்கலங்களைத் தகடாக அடித்துப் பலிபீடத்தில் பதிக்கக் கட்டளையிட்டார். அத்தகடுகள் இக்கிளர்ச்சியையும் ஆண்டவரின் பீடத்தைக் குருக்கள் மட்டும் அணுகலாம் என்று இஸ்ராயேலர்களுக்கு நினைவுபடுத்தும். (எண் 16:37-39)

இதுபோன்று தாத்தானும் அபிரோனும் மோயீசனுக்கும் ஆரோனுக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்த பொதுநிலையினர். இவர்கள் பாலையின் கடினவாழ்வின் விளைவாக எகிப்தில் அனுபவித்த சுகங்களின் ஏக்கம் வாட்ட மோயீசனுக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்து அவர் சொல்லுக்கு மறுப்புக் கூறினர். மோயீசன் அவர்களிடம் சென்று மக்களை அவர்களைவிட்டு விலகியிருக்கக் கட்டளையிட்டார். கிளர்ச்சியாளர் தம் கூடாரத்தின்முன் தம் மனைவி மக்களுடன் சேர்ந்து நின்றனர். அப்போது பூமி பிளந்து அவர்களைக் குடும்பத்தாருடன் சொத்துக்களுடன் விழுங்கிவிட்டது. (எண் 16:28-34)

பழையகால செமித்தியரின் எண்ணப்படி ஒருவனின் குற்றத்திற்கு அவனும் அவனைச் சார்ந்தவர்களும் பழிவாங்கப்படுவர் என்று கூறப்படுகிறது. இவ்விதம் இரு கிளர்ச்சியும் அடக்கப்பட்டது.

இ. ம. ஜெயசீலன்




### வீணை

வாணியின் கைகளில் தவழ்கின்றவீணை - அது
வாரி வழங்கிடும் செவிக்கின்பத் தேனை
பேணிய இசைக் கலைஞர் எல்லாம் - பெரும்
புதையலைப் போல் காக்கும் இசைக்கருவி வீணை.

நாரதர் கைகளில் வீணை — அதன்
நாதத்தில் மயங்குவர் தேவர்கள் என்பார்.
பாரதம் போற்றும் இசைப்பாடல் — அதன்
பக்குவ மெல்லாம் சொல்லுமே வீணை.

வீணைக் கொடியுடைய வேந்தன் எங்கள்
விறல் மன்னன் இராவணன் விளையாடும் வீணை
தேனைப் பசும் பாலில் சேர்த்துத் தரும்
தீஞ்சுவையை வெல்லும் தெள்ளமுத மன்றோ!

நரம்புகள் தருகின்ற நாதம் — அந்த
நாதத்தில் குளிப்பவர்க்கில்லையே வாதம்
சுருதிகள் சேராதபோது — அந்த
நாதத்தில் நிச்சயம் உண்டாகும பேதம்

சுருதிகள் சேர்கின்றபோது — அதன்
சுவைதனுக்கிங்கே ஈடிணையேது?
வீணையும் நாதமும் போலே தமிழ்.
இளைஞர்கள் இணைவரோ இப்புவிமீது?

நவாலியூர் நாயகி

## பழமொழி ஆகமமும் முதுமொழியும்.

வாசக நேயர்களே! எவ்வழி நல்வழி—அவ்வழி. நல்வழி!" என்று ஒரு விரிவுரையாளர் கூறுகின்றார்! அதாவது நமது மனச்சாட்சியின்படி நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் சரியா? தப்பா? என்று ஆலோசித்தபின் நமது மனச்சான்றின்படி நடக்கவேண்டும். காரணம்! மனச்சாட்சி என்பது இறைவனின் குரலொலி! இதையே வள்ளுவபெருந்தகையும்

"எண்ணித் துணிக கருமம்—துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்கிறார்.

இதற்கேற்ப இறைவார்த்தை கூறுவது 17/28 இல் "மதியீனனுங்கூட மௌனமாயிருப்பானாயின் ஞானியாகவும், தன் உதடுகளை மூடுவானாயின் அறிவுடையோனாகவும் மதிக்கப்படுவான்"

பொருத்தம் சரிதானா? "உன் நண்பன் யார் என்று சொல்! நீ யார்? என்பதை நான் சொல்லுவேன்"! இது ஓர் ஆங்கில பழமொழி இதற்கு திருநூல் தரும்பதில் 18/2ல் "மதிகெட்டவன் மனத்தின் இச்சையின்படி நீ பேசாவிடில் அவன் விவேகத்தின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளான்"

"உள்ளத்தின் நிறைவே-வாய் பேசும்" என்று நம் முன்னோர் மூதுரைத்தார்களே! ஆம்! மனிதன் வாயில் இருந்து புறப்படும் ஒவ்வொரு சொல்லும் அவனின் மனதில் புதைந்து கிடக்கும் உண்மை வெளிப்பாடுகளே!

இதற்கு இன்னொரு முதுமொழியையும் முன்வைக்கின்றேன்! "குழந்தை வாயிலும் குடிகாரன் வாயிலும் பொய் வராது"! என்ற முதுமொழிகளுக்கு திருநூல் தரும் பதில் இப்படியாக அமைகிறது 18/4 இல் "மனிதனின் வாயினின்று புறப்படுகிற வார்த்தைகள் ஆழமானநீரைப்போலாப ஞான ஊற்றுப் பெருகிப்பாயும் அருவியைப் போலாம்."

புதுமொழிகளுக்கு புதுவிளக்கம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

### வாரம் ஒரு சிந்தனை :

" மனிதன் திரியாக எரிய முன்வராதவரை அவன் தீபமாக ஒளிவிடமுடியாது"!

அன்புள்ள
எஸ். ஏ. நாதர்

### அமுத வாக்குகள்

பொதுஜன அமைதியை வளர்ப்பதிலும்! சமூக ஒற்றுமையை விருத்தி செய்வதிலும்! பத்திரிகைகளைப்போல் உபயோககரமாக உழைக்கக் கூடியவை வேறு எதுவுமில்லை.

—டாக்டர் அன்ஸாரி

வாழ்க்கையில் தன்னால் சாதிக்க முடியாதவைகளை எழுத்தாளன் நூல்கள் மூலம் செய்து காட்டுகிறான்.

—ஸிபட்கே

தொகுப்பு:-
எற்வேட் மொறின்
[illegible]
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி




ஒளி: 3 கதிர்: 26 — எம் விழிகளின் ஒளி யேசு எம் வாழ்வின் வழி யேசு

### அங்கத்துவம்

174 ம. சில்வேஸ்ரர் ஆண்டு 10.
சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
175 S. அன்ரன் றுப்பேஸ் ஆண்டு 8.
புனித சவேரியார் ஆ. ம. வி. மன்னார்.
176 V. S. சதீஷ்ருஜ் ஆண்டு 9.
புனித சவேரியார் ஆ. ம. வி. மன்னார்.
177 ஞா. ம. பெனடிக் ஆண்டு 10.
ராகலை த. ம. வி, அல்கரண் ஒயா.
178 M. அன்ரன் ஜீவராணி ஆண்டு 8.
புனித சவேரியார் பெ. ம. வி. மன்னார்.
179 சீ. லூர்துநாயகி ஆண்டு 6.
உயிலங்குளம், றோ. க. த. க. பா.
180 செ. தேவசித் ஆண்டு 10.
உடுவில், மகளிர் கல்லூரி.
181 செ. யூட்றவிநாத் ஆண்டு 11.
உடுவில் மான்ஸ் ம. வி.
182 செ. சேவியர் றவிகாந் ஆண்டு 8.
உடுவில் மான்ஸ் ம. வி.
183 றா. கிளறின் ஆண்டு 8.
றோ. க. த. க. பா. நானாட்டான்.
184 ம. மேரி எட்வேட் செல்வநாயகம் 11.
சில்லாலை, றோ. க. த. க. ம. வி.
185 அ. யூடிற் அமலினி ஆண்டு 8.
இலகடிப்பிட்டி, றோ. க. த. க. பா.
186 அ. செசில் நேருஜினி ஆண்டு 11.
புனித சவேரியார், பெ. ம. வி, மன்னார்.
187 அ. ஜெருவின் ஆண்டு 9.
அ. ம. தி. குருமடம், கொழும்புத்துறை.

### கௌரவ அங்கத்துவம்

A 12 அ. யூ. டயரேரா அரிப்பு முருங்கன்.
A 13 சு. விஜிதா. அச்சங்குளம், நானாட்டான்.
A 14 தை. பததிநாதன் அ. ம. தி. குருமடம், கொழும்புத்துறை.
A 15 அ. றெனி அ. ம. தி. குருமடம், கொழும்புத்துறை.

★ "திருக்குறளும் விவிலியமும்" போட்டி 2 விடையும், முடிவுகளும் அடுத்த சுடரில் வரும்.

## ஏன்?

பரமன் வந்தார், பாவிகளிடம்—ஏன்?
பரலோகம் சேர்த்திடவே, பாடுபட்டார்.
புனிதமாய் வாழ்ந்தாரே—ஏன்?
புவியினை வாழ்விக்கவே.
மரித்தாரே எமவரிடையில்—ஏன்?
மனிதன் என்பதை எண்பித்திடவே.
உரைத்தாரே உவமைகளை—ஏன்?
உண்மைகளை உணர்த்திடவே.
திருமுழுக்குப் பெற்றாரே—ஏன்?
திருநியமங்களை நிறைவேற்றிடவே.
பாவிகளை மன்னித்தாரே—ஏன்?
பாருலகின் தலைவன் தானே.
வியாபாரிகளை விரட்டினாரே—ஏன்?
விற்பனையில் விலையுயர்வால்தானே.
உயிர்த்தாரே உத்தமனாய்—ஏன்?
உலகினை உய்வித்திடவே.
சாதனைகள் புரிந்திட்டாரே—ஏன்?
சாத்தானை வென்றிடவே.
அசுத்தம் சிறிதும் அற்றவரே—ஏன்?
அனைத்தையும் அவர் கடந்தவரே.

அன்புராஜ் அங். எண். 56—,

### சிந்தைக்குச் சிறுவிருந்து

மலையளவு சொல்லைவிட கடுகளவு செயல் பெரிது. (மார்க்)

சிந்திக்காதவன் முட்டாள். சிந்திக்கத் துணியாதவன் கோழை, சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன் (டிரம்மன்ட்)

சூ. யூஜின் பற்றிமா றஜனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் கருத்து



பாதுகாவலனே! நீ வளர் உனது தரம் வளர்ந்துவரும் ந்துவரும் பத்திரிகைகளில் சிறி சிறுர்களுக்கு நல்ல ஆக்கமும் யதே இல்லை. ஏனெனருல் ஊக்கமும தருகிறது. 'காவலன் கண்மணிகள், குடும்பம் ஒரு கதம்பம், குறுக்கெழுத்து போட்டி, உங்களுக்குத் தெரியுமா? வேதாகமப்போட்டி என்பன மிகுந்த பலனளிக்கின்றன. உனது பணிகள் சிறக்க எனது நல்லாசிகள்.

வாழ்க காவலன், வளர்க அதன் பணிகள்.

சூ. யூஜின்பற்றிமாறஜனி.
ஆண்டான் செட்டிவெளி,
நானுட்டான்.

★

26-5-89 இல் பாதுகாவலனின் ''இசை' கண்டு மகிழ்ந்தேன். 'நவாலியூர் நாயகி'' க்கு என் நிறைவான பாராட்டுக்கள் சின்னக் குழந்தையாய்க் குதூகலித்துப்போனேன், அக்கவிதை கண்டு. கால்தூக்கி ஆடாததொன்றுதான் குறை பிசகாத இசையோடு வசையின்றி வாழ அந்த இசைப் பெண்ணுக்கு என் இனிய வாழ்த்துக்கள். காவலனுக்கு நிறைய நன்றி

அன்பு நெஞ்சன் வி.பி. அவர்களுக்கு ஆத்திரத்தோடு அல்ல- அன்புடனேயே ஒரு கோரிக்கை அன்னை தெரேசாவின் சிரிப்பில் மயங்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலை தயவுசெய்து பாதுகாவலனின் தொடர்ச்சியாக வெளியிடுங்கள் படித்துவிட்டு மடியாமலிருக்க.

விதிவிலக்குகளை ஏன் விதிகளாகக் காண்கிறீர்கள். விலக்குகள் நியமங்கள் அல்ல.

குருசுமுத்தண்ணை நல்லாய்க் கிசுகிசுத்தார்; 41இல் எங்கட கிராமங்களுக்கு அடிக்கடிபோய் வருகிறார்போல. ''இதுங்கள் இருட்டடல்ல'' தரமான சிறுகதை. நெலோமி தொடர்ந்து எழுதுங்கள் நன்றி.

ஜெயா பாலாஜி, முருகன்.

## எழுதிச் செபியுங்கள் போட்டி — 26

''ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் உண்டாக''

ஒரு செபம எழுதி 25-08-89-க்கு முன் ''பாதுகாவலன்'' த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள் சிறந்த செபம் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டு பரிசு ரூபா 25/-ம் உங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். பரிசு பெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 1-9-89இல் வெளிவரும்.

### பரிசுபெறும் செபம்

''சீனுவில் ஜனநாயகத்திற்குக் குரல் கொடுக்கும் மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட''

அன்புத் தந்தையே! மூவொரு இறைவா!

நாங்கள் விரும்பிக்கேட்டு நீர் எங்களைப் படைக்கவில்லை. நீர் நல்லதெனக் கண்டு எங்களைப் படைத்து, பராமரித்து, காத்து வருகின்றீர். உம் சித்தப்படி சுதந்திரமாக உருவாக்கிய மனிதனுக்கு உரிமைகள் பல வழங்கினீர். ஆனல் அக்கிரமங்கள் உலகில் அதிகரித்து விட்டதால் உரிமைகள் மறுக்கபபடுகின்றனவே!

இறைவா! மக்களால், மக்களுக்காக, மக்களே ஆளும் ஆட்சியே ஜனநாயகம் என்ற வரைவிலக்கணத்திற்கு மாருக மக்களே மக்களைக் கொன்று குவிக்கும் இன்றைய பரிதாப நிலையைக் கண்ணேக்கிப் பாரும் அரசே! குறிப்பாக கம்யூனிச நாடான சீனுவிலே ஜனநாயகத்திற்குக் குரல் கொடுக்கும் மாணவர்கள் கொல்லப்படுகின்றுர்கள். சிறைகளில் அடைக்கப்படுகின்றுர்கள். சிறைப்பட்டோருக்கு விடுதலையும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வும் வழங்க உம் திருமகன் யேசுவை உலகிற்கு அனுப்பிய பரம்பொருளே! ஜனநாயகத்திற்குக் குரல் கொடுக்கும் மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட அவர்கள்மேல் அருள் பொழிந்தருளும்.

உம் சீடர்களின்மேல் ஆவியைப் பொழிந்து, அவர்களைத் திடப்படுத்தி உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள் என்று அவர்களை அனுப்பியபோது, அவர்கள அஞ்சா நெஞ்சத்தோடு மறைபரப்பு சத்தியத்திற்கு சான்று பகர்ந்தார்கள். அதுபோல இந்த மாணவ சமுதாயத்தையும் உமது ஆவியின் கொடைகளால நிரப்பி அவர்கள் வீணே மாண்டு மடியவிடாது. அவர்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும, கோடானுகோடி சீனமக்களின் உயிர்களைக் காக்கவும் தயைபுரியும் இறைவா! ஆமென்.

### பாராட்டுப் பெறுவோர்

1) தி. ஜேன் டிரிஷிஜா, 2) யூ. மேரி ஜெசில்டா, 3) செல்வி ஜே. பிருன்சிஸ், 4) செல்வி றஜனி யோசவ், 5) அ. மேரி வாகினி, 6) பி. மேரி பிரேமா, 7) செலஸ்ரின் கிறிஸ்ரபெல் விஜயா, 8) சலமோன் சகாயமலர், 9) அன்ரன் கிறிஸ்ரின் அருள்றூபன், 10) டொன்பொஸ்கோ நிமல்சன, 11) அலெக்சாண்டர் அமல்ரூஜ், 12) பிரான்சிஸ் ஜெபராணி, 13) மரிய செல்வம் அலிஸ்ரன், 14) பேசி வினித்ரா, 15) ம. மஞ்ஜுஜினி 16) செல்வி றஜிதா செபஸ்ரியன், 17) ம. சஜுத்தவன, 18) அ. அன்ரனி, 19) தே. ஸ்ரனிஸ்லஸ், 20) அ. நந்தினி, 21) டொ. பற்றீசியா,

பரிசுபெறும் நற்பேறுளர் :

திருமதி அமலா ஏபிரகாம் சொய்சா, 7-ம் வட்டாரம், வங்காலை.

## மண்டைதீவு புனித இராயப்பர் ஆலய விழா

23-7-1989

ஞாயிறு மாலை 6மணி கொடியேற்றம், திருப்பலி

24-7-89—30-7-89

மாலை 6மணி செபமாலை, திருப்பலி

31-7-89

மாலை 6மணி செபமாலை, திருப்பலி, நற்கருணை வழிபாடு

1-8-1989

காலை 7மணி திருநாள் திருப்பலி

பங்குத்தந்தை — மண்டைதீவு

## பெரியகட்டு புனித அந்தோனியார் திருவிழா

பெரியகட்டு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் ஆவணிமாதம் 6-ம் திகதி ஞாயிறுக்கிழமை கொண்டாடப்படும். இதற்கு ஆயத்தமாக ஐந்துநாட்கள் மாலை வழிபாடுகள் 1-ம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறும். பக்தர்கள் இப்பதிக்கு வருகைதந்து புனிதரின அருளைப் பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

## பிரியா நினைவின் ஒரு வருடம்

26-07-89



மோகான் பிரான்சிஸ்

சூரியனிலிருந்து
ஒளிபிரியுமா
பூவிலிருந்து
மணம் பிரியுமா
பாலிலிருந்து
நிறம் பிரியுமா
தேனிலிருந்து
சுவைபிரியுமா
மோகான்!
உன் நினைவுதான்
எம்மை விட்டு
பிரியுமா?

பிரிவால் துயறுரும்
லெஸ்லி, பேர்ணி, ஜெறி
கண்டி
பெரியம்மா குடும்பத்தினர்,
இராசாஅன்ரா மாமன்மார்,
உறவினர்
யாழ்ப்பாணம். A/161

## 2வது ஆண்டு நினைவு



அருளப்பு பொனிப்பாஸ்

தோற்றம்: 14-05-1919 மறைவு: 26-07-1987


''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் மறவாதீர்கள்''

இறைவனேடு நீர் இணைந்த
இரண்டாண்டு கடந்ததையா
கறைபடிந்தே மகிழ்ச்சி
கண்ணீராய் ஆனதையா
குறைகள் ஒன்றுமில்லாமல்
நிறைவாக வைத்திருந்தாய்
இறைவன் அகம் வீற்றிருந்தே
எமக்காகப் பேசிடுவாய்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், நண்பர்கள், உறவினர்கள்.

நவாலி தெற்கு, மானிப்பாய்.

## 15-ம் வருட நினைவு அஞ்சலி



திரு. செபஸ்தியாம்பிள்ளை யோசவ் (Lab)

தோற்றம்: 28-01-98 மறைவு: 19-08-1974

அன்பின் தெய்வமே, நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் இதயத்தில் இருந்து பிரியாது. உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-08-1989 காலை 6-00 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமம் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றுர், உறவினர்கள்


**எவர் சில்வர் தயாரிப்புகள்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும் பார்க்க தரமாகவும், மலிவாகவும் தயாரிக்கப்பட்ட Rajz Brand தேவநற்கருணைப் பாத்திரம் (Ciborium), இரசபாத்திரம் (Chalice), தேவநற்கருணைத் தட்டு, காணிக்கைப் பை, பீட அலங்கார விளக்குகள், பூ ஏந்தனங்கள் தூண்டாமணி விளக்குகள், தேவநற்கருணைக் கூடு (Tabernacle) இன்னும் பற்பல. காட்சியறை:- S. A. தேவதாசன், சூராவத்தை, கன்னுகம்.


## நினைவு அஞ்சலி



திரு. வில்லியம் ஜெயராஜா
(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)

மலர்வு 20-7-1949 உதிர்வு 12-7-1989

''என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''
—யேசு

இறை சித்தப்படி எதிர்பாராதவிதமாக எம்மிடம் இருந்து அகாலமாகப் பறிக்கப்பட்ட வில்லியம் ஜெயராஜாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக,

31-ம் நாள்—1-08-1989
சில்லாலை கதிரைமாதா ஆலயம்.

31-ம் நாள்—11-8-89
அல்லைப்பிட்டி மாதாகோயில்
திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்

## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்ரன் மரிக்சன் செல்வரத்ணம்
(காங்கேசன் சீ. தொ. தொலைபேசி இயக்குநர்)

மலர்வு 3-5-1926 உதிர்வு 28-7-1977

இரக்கமே உருவான இறைவா, இன்னல்கள் நிறைந்த இவ்வுலகிலிருந்து நீர் அழைத்துக்கொண்ட அடியான் அன்ரன் மரிக்சன் செல்வரட்ணத்துக்கு முடிவில்லாத அருள் வாழ்வினை அளித்தருளும். இவரது ஆன்மா இளைப்பாற்றிக்காக 28-7-89 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கொழும்புத்துறை புனித சூசையப்பர் அலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயரும்
குடும்பத்தினர்

## வாழ்வகப் பங்கில்

வாழ்வகப் பகுதியில் அகதிகளை ஆதரிக்கும் அன்னையாகிய செபமாலை மாதாவின் பெருவிழா 1-7 89 சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஞாயிறு திருநாள் திருப்பலி காலை 6-45 மணியளவில் அருள்தந்தை செபஸ்ரியன் அடிகளால் நிறைவேற்றப்பட்டது.

மனேகரன் மனேயினி
போயிட்டி, இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# வழிபாட்டு மொழித் தெரிவு பொது நிலையினரது தீர்மானம்

பெங்களூர் பேராயர் அல்பொன்சஸ் மத்தாயஸ் தமது மறை மாவட்டத்தில் 15 ஆண்டுகளாக நீடித்துவரும் வழிபாட்டு மொழிபற்றிய சர்ச்சைக்கு பொதுநிலையினரே தக்க தீர்வொன்றைக் காண வேண்டுமெனக் கூறியுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் துணை மறைவட்டமாகிய சிக்மகளூரிலிருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்ட இவர் 15 வருடப் பிரச்சினையை ஒரு நாளில் தீர்க்கமுடியாதென்றும், ஒரு சிறுபான்மையினர் சட்டம் பிறப்பிக்கத் தொடங்கினால், பெரும்பான்மையோர் தமது பொறுப்பை அசட்டை செய்ததே காரணம் என்றும் கூறினார்.

கர்நாடக மாநிலத்தில் வாழும் கத்தோலிக்கருள் 60—70 வீதமானோர் தமிழ் நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த தமிழர்களே, சுமார் 10 வீதமானோர் கன்னடம் பேசுவோர். மற்றவர்கள் பிற இந்திய மொழிகளைப் பேசுவோர். பெரும்பான்மையினரான தமிழர் தமிழே வழிபாட்டு மொழியாயிருக்க வேண்டுமெனக்கேட்டுள்ளனர். கன்னடியரோ தமது மொழி அம்மாநிலத்தின் அரச கரும மொழியாதலால் அதுவே வழிபாட்டு மொழியாயிருக்க வேண்டுமென்கின்றனர். இரு திறத்தவரையும் வெவ்வேறு குருக்களின் குழுக்களே தூண்டி வந்ததாகத் தெரிகிறது.

சென்ற ஆண்டில் தாம் எந்த மொழியையும் மக்கள் மீது திணிக்கப் போவதில்லை யென ஆயர் விடுத்த சுற்றறிக்கையொன்றுக்கு கன்னடியர் வன்மையான எதிர்ப்புக் காட்டினர்.

ஆயரின் சுற்றறிக்கைப்படி ஒவ்வொரு பங்கிலுமுள்ள மக்களைப் பொறுத்தே வழிபாட்டு மொழி அமையவேண்டும், பொதுவாகத் திருப்பலிகள் பல்வேறு மொழிகளிலும் நடைபெறுகின்றன. சர்ச்சையெல்லாம் நத்தார், பாஸ்கா போன்ற விசேட வைபவங்களைப் பற்றியதுதான். ஆயர் தமது பதவிக்குரிய முறையில் வழிபாடுகளை நடத்தும்போது ஆங்கிலம், தமிழ், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளும், பாவிக்கப்படுகின்றன. இந்த மும்மொழித் திட்டம் கன்னடியருக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது.

ஒரு குடும்ப விடயமான இதை பகிரங்கப்படுத்த தாம் விரும்பவில்லையென்றும் திருச்சபையின் வழிமுறைகளை கருத்தில் கொண்டு மக்களே இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டுமென்றும் பேராயர் மத்தயாஸ் கூறியுள்ளார்.

## யுவதிகளுக்கான தேவஅழைத்தல் கருத்தரங்கு

நவாலிபுனிதபேதுருபாவிலு ஆலயத்தில் 30-06-89 அன்று யுவதிகளுக்கான கருத்தரங்கு. நல்லாயன் மட கன்னியர்கள் சங். சகோ. சிசிலியா, சகோ. மாறி யூவெறெகியா தலைமையில் நடைபெற்றது. பங்கிலுள்ள அனைத்து யுவதிகளும் கலந்துகொண்ட இக்கருத்தரங்கு காலை 9 மணியளவில் தூய ஆவியானவரின் பாடல் செபத்துடன் ஆரம்பமாகியது.

இறைவனின் துறவற அழைத்தல், இல்லற அழைத்தல் ஆகிய இரு அழைத்தல்கள் பற்றியும் பல கருத்துக்கள் அரங்கேற்றப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன. இல்லற அழைத்தலின் மகத்துவம் பற்றியும், ஒரு பெண் யுவதியாக இருந்து, மனைவியாகி, தாயாகும்போது அவளிடம் இருக்கவேண்டியநற்பண்புகள்பற்றியும் சேய்பராமரிப்பு பற்றியும் தெளிவான விளக்கங்களை சங். சகோ. சிசிலியா எடுத்துக்கூறினார். துறவற அழைத்தல் பற்றி கூறியசங். சகோ. மாறியூவெறெசியா "தேவ அழைத்தல் நாகரீகம் வளர்ச்சியடைந்து வரும் இக்காலத்தில் மிகவும் தேவையானதொன்று" எனவும் தேவ அழைத்தலுக்காக செபவாழ்வின் மூலம் எம்மை நாம் தயார் படுத்திக்கொள்ள வேண்டும் எனவும்விதந்துரைத்தார்.

இறுதியில் யுவதிகளுக்கான முரண்பட்ட கருத்துக்களுக்குத் தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன், நல்லாயன் கன்னியர் மட சேவைகள், அதன் கடின உழைப்புக்கள் பற்றி சங். சகோதரிகளால் எடுத்துக்கூறப்பட்டு நன்றிச் செபத்துடன் முடிவடைந்தது.

தகவல்:- டெய்சியோசவ்

## எமது சடங்குமுறைகளிலுள்ள குறைபாடு

ஆசிய நாடுகளில் 30 ஆண்டுகள் மறைப்பணி புரிந்த யேசுசபைக் குருவானவரான பிதா பிரான்ஸிஸ் டோயில் என்பவர் பின்வரும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

உலகின் பல பாகங்களில் இளைஞரும் பிறரும் சமய வழிபாடுகளிலிருந்து பெருமளவில் விலகிச் சென்று கொண்டிருப்பதாக பல கிறிஸ்தவ சபைகள் முறைப்படுகின்றன.

நவீன உலகில் பெருவிழாக்களாக இருப்பன ஒலிம்பிக் விளையாட்டுக்கள், உலக வெற்றிக் கிண்ணப் போட்டி முதலியனவே. நவீன தொடர்பு சாதனங்கள் காரணமாக இந்த விழாக்கள் கோடிக்கணக்கான மக்களைக் கவர்ந்து கொள்கின்றன. இது மட்டுமல்லாது "பொப்" இசை நிகழ்ச்சிகள் இளைஞரைப் பெரிதும் கவர்கின்றன. அவற்றில் அவர்கள் முழுமையான ஈடுபாட்டுடன் பங்குபற்றி ஒருவித பரவச நிலையையும் அடைகின்றனர். இன்றைய தெய்வங்கள் விளையாட்டு வீரர்களும் கலைஞர்களுமே. பூரண ஈடுபாட்டுடனும், உரிமையுடனும், சலிப்புத்தரும் தொழிற்சாலை அல்லது அலுவலக வாழ்விலிருந்து தாம் மேலெழுப்பப்படும் உணர்வுடனும் புதிய விழாக்களில் இத் தெய்வங்களை வழிபடுகிறார்கள்.

கத்தோலிக்க வழிபாட்டுக்கு என்ன நடந்துவிட்டது? மூல வளங்களும் ஆற்றல்களும் அதற்கு இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் போதியளவு பயன்படுத்தப்படுவதில்லை.

திருப்பலிக்குப் போவது ஒருவரின் பிரமாணிக்கத்தையும் சகிப்புத் தன்மையையும் பரிசோதிக்கும் ஒன்றாக இருக்கிறதேயொழிய, அவரது வாராந்த வாழ்க்கையின் உச்ச நிலையாக அது இருப்பதில்லை. போதனை செய்யும் குருக்களும் வாசகங்களை வாசிப்பவர்களும் சுவாரசியமற்ற விதத்தில் அதைச் செய்கின்றனர். மக்களை கவரக் கூடிய இசை, நடன, நாடகப் பண்புகள் அங்கு காணப்படுவதில்லை. சமாதானம் தெரிவிக்கும் போதுதன்னும் ஒருவரையொருவர் கண்ணால் பார்ப்பது கூட இல்லை.

எந்த இறை அனுபவமென்றாலும் அது இறைவனுக்கும் அவரது படைப்புகள் அனைத்திற்குமிடையே உள்ள ஆழ்ந்த ஒன்றிப்பை உணர்த்த வேண்டும்.

ஆனால் இன்று உள்ள சமயங்கள் ஒருமைப்பாட்டையல்ல, பிளவுகளையே ஏற்படுத்துகின்றன.

ஆகவே படைப்புகளனைத்தையும் ஒன்றாக இணைக்கும் ஒரு இறையனுபவத்தை அளிப்பதாக எமது திருவழிபாட்டுச் சடங்குமுறைகள் அமைய வேண்டும். உள்ளம், உணர்ச்சி, உடல், வார்த்தை, இசை, நாடகம், நடனம் அனைத்தையும் ஈடுபடுத்துவதாக அது அமையவேண்டும். மக்களின் மொழி, கலாசாரத்தின் வழியாக அது வெளிப்படுத்தப்படவேண்டும்.

சமூகமாயிருப்போர் அனைவரையும் ஈடுபடுத்தி, தமது சமுதாயத்தையும், சூழலையும் மாற்றியமைக்கக் கூடியதாக அவர்களது வாழ்வைத் தொட வேண்டும்.

## புதிய கத்தோலிக்க பாடசாலைகள்

பாக்கிஸ்தானிலுள்ள முல்தான் மறைவட்டம் பல புதிய கத்தோலிக்க கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்கவுள்ளது. ஆயர் பேரருள்திரு பற்றூஸ் யூசவ்(மே 13)மற்றிகுலேசன் பரிட்சைக்கு வந்திருந்த மாணவர்களுக்கு உரையாற்றுகையில் . தாம் ஆரம்பக் கல்விக்கு பல புதிய கத். கல்வி நிலையங்களை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாகவும் உயர்கல்விக்காக இன்னும் பல கல்லூரிகளை அமைக்க விருப்பதாகவும் எடுத்துரைத்தார்.

## விநோத விற்பனை

ஆனித் திங்கள் 10-ம் 11-ம் திகதிகளில் தாண்டவன்வெளி பங்கின் இளைஞர்களால் பங்கின் ஆக்கப் பணிகளுக்காக விநோத விற்பனையும் களியாட்டங்களும் நடாத்தப்பட்டன. பங்குத் தந்தையுடன் பங்கு மக்களும், ஏனைய பங்கு மக்களும் உற்சாகத்துடன் பங்கு பற்றிச் சிறப்பித்தார்கள்.

## கலாநிதிப்பட்டம்

கௌரவ கலாநிதிப்பட்டம் ஒன்றை பாண்டிச்சேரி மத்திய பல்கலைக் கழகம் மே 25 ஆம் திகதி கருதினல் லூர்துசாமி அவர்களுக்கு வழங்கியுள்ளது. கீழைத்தேய திருச்சபையின் பொறுப்பாளராகப் பணியாற்றி வரும் கருதினல் லூர்துசாமி முன்பு திருத்தந்தையின் மறைபரப்பு பணிக்கு பொறுப்பாக இருந்தபோது இலங்கையின் பல பாகங்களுக்கும் வந்ததை வாசகர்கள் நன்கு அறிவர்.

## முருங்கனில் முத்தமிழ் போட்டி

மன்னார் மறைவட்டப் பொதுநிலையினர் பேரவையின் ஆதரவில் முத்தமிழ் விழா 24-06-89 சனிக்கிழமை காலை 9 மணிக்கு முருங்கன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகியது. மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் பேரவை உபதலைவர் திரு. வி. அ. லெம்பேட் ஆசிரியர் அவர்கள் விழாவுக்குத்தலைமைவகித்தார். இன்றுள்ள நெருக்கடியான பதட்டமான வேளையிலே எதிர்பார்த்த பாடசாலைகள் சில வரமுடியாததையிட்டுக் கவலை தெரிவித்து இன்னும் எத்தனையோ நெருக்கடிகள் நம் சத்திய திருச்சபையின் வளர்ச்சிக்குத் தடையாக வரலாம், இருப்பினும் விழிப்புள்ள பொதுநிலையினர் உருவாக இச் சிறுவர்களின் விழா நமக்கு உற்சாகம் அளிக்கும். ஆலய விழாக்களோடு மட்டும் நின்றுவிடாது இப்படியான கருத்து மிக்க விழாக்களை ஆர்வத்துடன் நடத்துகிறோம்" என்றார்.

அன்ரனி

## பங்குரீதியாக வேதாகம வகுப்பு

போயிட்டி மறையாசிரியர்கள் மாணவர்கள் நலன் கருதியும், அப்பங்கின் வளர்ச்சிக்காகவும் பங்குத்தந்தை அருள் திரு யேசுதாஸ் அடிகளார் வேதாகம வகுப்பு ஒன்றை பங்குக் குருமனையில் ஆடித் திங்கள் 9—ம் திகதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பித்து வைத்தார். இவ் வகுப்புகளை மறையாசிரியர் பங்கிராஸ் அவர்கள் நடத்திவருகின்றார்.

முதலில் ஆரம்ப வகுப்பு செபவழிபாட்டுடன் ஆரம்பமாகியது. பின் பங்குத்தந்தையின் வரவேற்புரையைத் தொடர்ந்து மறையாசிரியர் அவர்கள் இவ்வகுப்பின் நோக்கத்தை எடுத்துக்கூறி அன்றைய வகுப்பை ஆரம்பித்து வைத்தார். இவ்வேதாகம வகுப்பின் பயனை உண்டுமகிழ எமது அயற்பங்கு மறையாசிரிளர், மாணவர்கள் வருகை தந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தகவல்:- வி. அன்பழகி

## கத். பத்திரிகையின் புதிய ஆசிரியர்

சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கில கத்தோலிக்க வாரப்பத்திரிகை "நியூ லீடர்" இன் புதிய ஆசிரியராக அருள் திரு செபஸ்ரியன் இர்பாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மடு அன்னையின் திருவிழா
## 15-08-1989

வழமைபோல் மடு அன்னையின் திருவிழா எதிர்வரும் ஆவணிமாதம் 15-ம் திகதி செவ்வாய்கிழமை இடம்பெறவுள்ளது. இதற்கான ஆயத்த நவநாட்கள் 6-ம் திகதி ஆரம்பமாகும். போக்குவரத்து ஒழுங்குகளும், கேரதீவு—பூநகரி மேலதிக பாதை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. மடுத்திருப்பதியில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதால் திருப்பதிக்கு வரவிருக்கும் பக்தர்கள் திருப்பதியில் தங்கியிருக்கும் நாட்களில் பாவனைக்கென தண்ணீர் சேகரித்து வைப்பதற்கான பாத்திரங்களையும் (வாளி, குடம்) கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

நன்றி,

மடுப்பரிபாலகர்,
மடுத்திருப்பதி.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஜூலை மாதம் 28ஆந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவுஇல: QB/ 1001/ 58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்